
# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்


| மலர்:5 | இதழ்: 5 | பிப்ரவரி : 2021 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:5 | Issue: 5 | February : 2021 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |

# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

**Shri G.S. Venkataraman**
Author

**Shri N. Subramaniam**
Managing Trustee

**Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sahtyanarayana, Shri. J. Sathish, Sow. G.V. Mahashree Neela**
Trustees



# மாசி பௌர்ணமி

## கூட்டுப்பிரார்த்தனை

**நாள் :**
**27.02.2021 சனிகிழமை**

**நேரம் :**
**மாலை 5.00 மணி**

**இடம் :**
**ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயம்,**
**மாடம்பாக்கம்**

**தொடர்புக்கு :**

**94440 60346 / 94434 95950**

வேதபாரதி

81/1/ Mannappa Street, Kottur, Chennai – 600 085. Tel : 044 2447 4744

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

**வேதமந்திரம் - 17**

**நாயமாத்மா ப$^{3}$லஹீனேன லப்$^{4}$யோ:**
**ந ச ப்ரமாதா$^{3}$த் தபஸோ வாப்யலிங்கா$^{3}$த் |**

**பொருள் :**

*ந– அடையப் படுவதில்லை*

*அயம் ஆத்மா – இந்த ஆத்மா, பலஹீனேன – வலிமை இல்லாததனால், ந லப்$^{4}$ய– அடையப்படுவதில்லை.*

*ப்ரமாதாத் ச– கவனக் குறைவுடன் இருப்பதாலும்*

*துறவற்றஞானத்தாலும் அடையப்படுவதில்லை.*

*தபஸ : அபி – ஞானத்தாலும், அலிங்காத் துறவற்ற, வா – அடையப்படுவதில்லை.*

**கருத்து :**

*இந்த ஆத்மா பலம் குறைந்தவனால், கவனக் குறைவு இருப்பவனால் அடையப் படுவதில்லை.*

*- முண்டகோபநிஷதம்.*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 5 இதழ்: 5

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank,**
**Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**

**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**Published on : 1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/21-23 /**
**Valid from 01.01.2021 to 31.12.2023**


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு.. | 5 |
| மாசி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 11 |
| சுபாஷிதம் | 13 |
| சவாரி | 14 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 17 |
| ஸ்ரீமத் பாகவதம் | 18 |
| தர்மத்தின் குரல் | 20 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| ரத ஷப்தமீ | 29 |
| பாரத தேசப் புனித யாத்ரை | 30 |
| சாதனைப் பறவைகள் | 33 |
| பசு சர்வரோக நிவாரணி | 36 |
| அக்கசாலை அன்னதானப் பிள்ளையார் | 38 |
| புரோஹிதர் | 41 |
| இந்தியா 'பாபா' க்களின் மூழ்கிவிட்டதா | 45 |



புத்தக வடிவமைப்பு :

**ரெம்ஸ் பிரிண்டஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,செ-42.
போன்: 8939000064



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

# ஒரு நிமிடம் உங்களோடு.....

**அஹமாத்மா கு$^{3}$டாகேஸ ஸர்வபூ$^{4}$தாஸயஸ்தி$^{2}$த /**
**அஹமாதி$^{3}$ஸ்ச மத்4யம் ச பூ$^{4}$தாநாமந்த ஏவ ச //**

**(கீதை 10-20)**

**பொருள் :** *விழிப்புடையோய் எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆத்மா நானே, உயிர்களின் ஆதியும் இடையும் இறுதியும் நானே.*

*நான் பரமாத்மாவாக எல்லார் உள்ளேயும் நிறைந்திருக்கிறேன். நானே முதலும் இடையும் கடைசியும் என்கிறார். இந்த சரீரம் எத்தனைக் காலம் இருக்குமோ அத்தனைக் காலமும் இந்த பூமி இருந்தே ஆகவேண்டும். பூமி எத்தனைக் காலம் இருக்குமோ அத்தனைக் காலம் சரீரம் இருக்காது. காரணம் பூமியிலிருந்து வந்த சரீரம் பூமிக்கே செல்லவேண்டும். எத்தனைக் காலம் உள்ளே வாயுவும் சூடும் இருக்குமோ அத்தனைக் காலம் வெளியில் வாயுவும் சூடும் இருக்கும். இறந்த ஒரு தேகத்தின் உள்ளே வாயுவும் சூடும் இருப்பதில்லை. இதுபோல் நம்முடைய மனது சென்றடைய ஒரு பரமாத்மா உண்டு. சரீரம் ஜீவாத்மாவாகவும் பூமி பரமாத்மாவாகவும் என்னும் போது சரீரம் பூமியிலிருந்து விட்டு இருக்க முடியாது. நாம் ஆகாயத்தில் பறந்தாலும் பூமியின் ஆக்ரஷ்ணத்தில்தான் இருப்போம். சரீரத்திற்கும் பூமிக்கும் பந்தம். வெளி வாயுவிற்கும் உள் வாயுவிற்கும் பந்தம். வெளி சூட்டிற்கும் உள் சூட்டிற்கும் பந்தம். அப்படியானால் இந்த மனதிற்கும் பரமாத்மாவிற்கும் பந்தம் உண்டு. மனதிற்கும் பரமாத்மாவிற்கும் பந்தம் வெளியில் உண்டாகாது. மனது நம் உள்ளே இருப்பதால் பரமாத்மா, ஈஸ்வரன், பகவான் வெளியில் இல்லை, உள்ளேதான் இருக்கிறார் என்பது நிரூபணமாகிறது. அப்படியானால் கோயில்களில் உள்ள கடவுள்கள்? என்ற கேள்வி வரும். இந்த மனதும் பரமாத்மாவும் ஒன்று சேர ஒரு சுலபமான வழிதான் கோயில்கள். மனதும் பகவானும் விட்டுப்பிரியமுடியாது. ஆனால் இன்று எல்லாருடைய மனதும் அதை மறந்துவிடுகிறது. நம்முடைய மனது முழுவதும் நம் சரீரத்தைக் குறித்தும், சொந்தங்களைக் குறித்தும்,*

செல்வங்களைக் குறித்தேதான் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நம் மனதை நிலைநிறுத்துவது இவை எல்லாம் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். நம்முடைய மனது பகவானின் ஒரு அம்சம். கடல் அலைகளைப் போல் நம் மனதைப் பார்க்க வேண்டும். கடல் என்னும் பரமாத்மாவின் ஒரு அம்சம்தான் கடல் அலைகள் என்கிற ஜீவாத்மா. அந்த அலைகள் அடித்து கரையை அடைந்ததும் "இந்த கரைதான் என்னுடைய சுகம், இந்த கரைதான் என்னுடைய சக்தி, இந்த கரைதான் என்னுடைய தைரியம்'' என்று நினைக்கிறது. பாவம் அலைகளுக்குத் தெரியாது. கரைக்கு வந்த அடுத்த நிமிடம் கடலுக்குத் திரும்பிபோகவேண்டும் என்பதை. இதுபோல் நம்முடைய மனதும் "நான் பகவானின் ஒரு அம்சம், நான் போய் சேரவேண்டியது அந்த பகவானிடத்தில் தான்'' என்பதை அறிவதில்லை.

ஸ்ரீமத் பாகவதம் முழுவதும் இதைத்தான் கூறுகிறது. பகவான் உத்தவரிடம் கூறும்போது **"மாமநுஸ்மரஸித்தம் மய்யேவ ப்ரவிலீயதே''** = என்னை நினைக்கின்ற மனது என்னிடமே வந்து சேரும் (பா 11-14-27). அப்படி என்னிடம் லயிக்காத மனது **"புனரபி ஜனனம்''** மீண்டும் மனித பிறவி எடுக்கும்.

அதனால் **"எப்போதும் நம்முடன் பகவான் இருக்கிறார்''** என்று நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி நினைப்பவர்க்கு கிடைப்பதுதான் **"விவேகம்''.** இதற்கு வைராக்கியமுள்ள மனதும் பக்தியும் வேண்டும். அதாவது அலைபாயும் மனதை அதிலிருந்து விடுவித்து பகவானை நினைப்பதுதான் **"வைராக்யம்''** அப்படி உள்ள மனதை பகவானிடம் சமர்ப்பிக்க வேண்டும். நாம் என்ன மந்திரம் ஜபிக்கிறோம், எந்த இடத்தில் ஜபிக்கிறோம், எப்போது ஜபிக்கிறோம், எப்படி ஜபிக்கிறோம் என்பது முக்கியமல்ல. நம் மனது எங்கே இருக்கிறது என்பதுதான் முக்கியம். ரத்னாகரன் (வால்மீகி) **"ராமா ராமா''** என்று ஜபிப்பதற்கு பதிலாக **"மரா மரா மரா''** என்றுதான் ஜபித்தான். பகவான் கூறுகிறார் **"சர்வேஷு காலஷு மாம் அனுஸ்மர''** = எப்போதும் என்னையே நினை.

ஆகையால் எப்போதும் பகவானையே நினைத்திருப்போம்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

# மாசி மாத விசேஷங்கள்

**(பிப்ரவரி 16.02.2021 முதல் மார்ச் 15.03.2021 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 13.02.2021 | மாசி 1 | சனி | சந்த்ர தரிசனம் |
| 15.02.2021 | மாசி 3 | திங்கள் | சதுர்த்தி |
| 17.02.2021 | மாசி 5 | புதன் | சஷ்டி |
| 19.02.2021 | மாசி 7 | வெள்ளி | ரதஸப்தமி |
| 20.02.2021 | மாசி 8 | சனி | பீஷ்மாஷ்டமி |
| 23.02.2021 | மாசி 11 | செவ்வாய் | ஏகாதசி |
| 24.02.2021 | மாசி 12 | புதன் | துவாதசி, பிரதோஷம் |
| 26.02.2021 | மாசி 14 | வெள்ளி | மாசிமகம் |
| 27.02.2021 | மாசி 15 | சனி | பௌர்ணமி |
| 02.03.2021 | மாசி 18 | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| 04.03.2021 | மாசி 20 | வியாழன் | சஷ்டி |
| 05.03.2021 | மாசி 21 | வெள்ளி | அனுஷம் |
| 09.03.2021 | மாசி 25 | செவ்வாய் | ஏகாதசி |
| 10.03.2021 | மாசி 26 | புதன் | பிரதோசம், துவாதசி |
| 11.03.2021 | மாசி 27 | வியாழன் | மஹா சிவராத்ரி |
| 13.03.2021 | மாசி 29 | சனி | அமாவாசை |

## 13.03.2021 சனிக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ ஸார்வரி நாம ஸம்வத்ஸரே உத்தராயணே சிசிரருதௌ கும்ப மாஸே கிருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: அத்ய ஸ்திர வாஸர யுக்தாயாம் பூர்வப்ரோஷ்டபதா நக்ஷத்திர யுக்தாயாம் விஷ்ணுயோக விஷ்ணுகரண ஸர்வ ஏவம் குண விஸேஷன விசிஷ்டாயாம் அஸ்யாம். அமாவாஸ்யாம் புண்யகாலே தர்ச ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# அட்டைப்பட விளக்கம்

## ப்ரம்மக்ஞானி சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி 2021



ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் ஒரு பெரிய சித்த புருஷர். ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் தென்னாட்டு யாத்திரையின் போது காஞ்சிபுரத்தில் தங்கியிருந்தார். அப்போது ஸ்ரீவித்யையை உலக நன்மைக்காக நிலைநாட்டிவந்தார். அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு சரியான நபர் இல்லாததை உணர்ந்து நர்மதை நதிக்கரையோரம் வசித்துவந்த 30 தேவி பக்தர்களை குடும்பத்தோடு காஞ்சிபுரம் அழைத்துவந்து குடியமர்த்தினார். இந்த 30 குடும்பத்தினரும் அவர்தம் வம்சத்தினரும் **"காமகோடி வம்சம்"** என்று அழைக்கப்பட்டனர். அந்த வம்சத்தில் வந்த ஸ்ரீவரதராயர் மரகதத்தம்மாள் தம்பதியினருக்கு அன்னை காமாட்சியின் அருளால் உத்திரமேரூர் அருகே வழூர் கிராமத்தில் 1870ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22ம் நாள் சனிக்கிழமை **"ஹஸ்த"** நட்க்ஷத்திரத்தில் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் அவதரித்தார்.

சிறு வயதிலேயே தன் தாத்தாவிடம் வேதம், பாஷ்யம், ஸ்லோகம் முதலியவற்றை நன்கு கற்றுணர்ந்தார். இவருடைய தாய் உயிர் பிரியும் வேளையில் குழந்தை ஸ்வாமிகளைத் தன் மடியிலே அமர்த்தி அவருடைய நெஞ்சிலே தனது வலது கரத்தைப் பதித்து "அருணாசல, அருணாசல, அருணாசல" என மூன்று முறைகூறிவிட்டு தன் இன் உயிரை நீத்தார். ஸ்வாமிகள் தம்முடைய 14 வயதில் தந்தையையும் இழந்தார். அதன் பின் சிற்றப்பாவால் அன்புடன் வளர்க்கப்பட்டார்.

ஆனாலும் அவருடைய கவனம் உலகியலில் செல்லவில்லை. அவர் தினமும் ஸ்ரீ காமாட்க்ஷி அம்மன் கோயிலில் ஸ்ரீ மூகபஞ்சசதியைச் சொல்லிக்கொண்டே இரவு முழுவதும் அம்மன் கோயிலை பிரதட்க்ஷிணம் செய்வாராம். அதன்பிறகு அவருக்கு ஞானமும் ஏற்பட்டுவிடுகிறது. இவருக்கு திருமண ஏற்பாடுகள் நடைபெற்றபோது இவருடைய ஜாதகத்தை

கணித்தவர்கள் இவர் சன்னியாசியாக மாறி யோகியாகக் கூடியவர் என்று கூறினார்கள்.

ஸ்வாமிகளின் மனம் ஆன்மீகத்தையே விரும்பியது. ஹரித்வாரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு வந்திருந்த பாலாஜி ஸ்வாமிகள் என்பவரிடம் தீட்சை பெற்றார். அதன்பின் மிகக் கடுமையான யோக தவப் பயிற்சிகளை மேற்கொண்டு உண்ணாமல் உறங்காமல் மயானத்தில் அமர்ந்து தவம் புரிந்தார். அஷ்டமா சித்திகள் உட்பட பல்வேறு ஆற்றல்களும் கைவரப்பெற்றார்.

தாயின் மறைவிற்குப் பின் அவருடைய அறிவுரைப்படி தன்னுடைய 19வது வயதில் கிபி 1889 ஆம் ஆண்டு திருவண்ணாமலைக்கு வந்து உண்ணாமலை சமேத ஸ்ரீ அருணாச்சலேஸ்வரரை தரிசித்து கண்ணீர் மல்கினார். அது முதல் அருணாச்சலேஸ்வரர் ஸ்மரனைதான். மனிதன், மிருகம், கல் எல்லாம் அவருக்கு ஒன்றே. சர்வத்தையும் பிரம்மமாகக் காணும் பக்குவ நிலையை அடைந்தார். அவர் 40 ஆண்டு காலம் திருவண்ணாமலையில் பல சித்துகளைச் செய்தார்.

ரமண மஹரிஷி சிறுவயதில் அண்ணாமலையார் கோயிலில் உள்ள பாதாள லிங்க சன்னதியில் நீண்ட நாட்கள் உணவும் நீரும் எடுத்துக்கொள்ளாமல் ஆழ்ந்த நிலையில் தவமிருந்தார். அதனால் அவரைச் சுற்றி பல்லி, பாம்பு போன்றஉயிரினங்கள் அண்டின. இதைக் கண்ட ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் அவரை காப்பாற்றி உலகிற்கு ரமணரை அறிமுகம் செய்தார்.

ஒரு நாள் திருவண்ணாமலை வீதியில் ஒரு சவ ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது. அதன் பின் சென்ற ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் திடீர் என்று திருமணம் நடந்துகொண்டிருந்த ஒரு திருமண மண்டபத்திற்குள் நுழைந்தார். சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டு குளிக்காமல் திருமண மண்டபத்தில் நுழைந்ததைக் கண்டு பலரும் அவரை கோபத்துடன் திட்டினார்கள். சிலர் ஸ்வாமி வந்தால் அது நிச்சயம் நல்லதற்கே என்று நினைத்தார்கள். ஸ்வாமிகள் யாரையும் பார்க்காமல் நேராக சமையல் அறைக்குச் சென்று அங்கு பெரிய அண்டாவில் கொதித்துக்கொண்டிருந்த சாம்பார் அண்டாவை கீழே சாய்த்து சாம்பாரை கொட்டிவிட்டு வேகமாக வெளியே சென்றுவிட்டார். எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி, ஆத்திரம். சிலர்

திட்டிக்கொண்டே மஹானை பிடிக்க பின்னால் வேகமாக ஓடினார்கள். மஹான் எங்கேயோ போய் மறைந்துவிட்டார். மண்டபத்தில் சமையல் அறைக்குச் சென்று கீழே கொட்டிய சாம்பாரைப் பார்த்த அனைவரும் அதிர்ச்சியும் ஆனந்தமும் அடைந்தார்கள். காரணம் கொட்டிய சாம்பாரில் ஒரு பெரிய நல்ல பாம்பு செத்துக்கிடந்தது. எல்லோரும் மஹானை தொழுதனர். நாற்பது ஆண்டு காலம் திருவண்ணாமலையில் பல சித்துகளைச் செய்திருக்கிறார்.

கி.பி. 1929 ஆம் ஆண்டு ஜனவரி 4ம் நாள் (மார்கழி மாதம் 21ஆம் நாள்) வெள்ளிக்கிழமை ஹஸ்த நட்க்ஷத்திரத்தன்று சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் இறைவனோடு இரண்டறக்கலந்தார். ஸ்வாமிகள் அவதரித்ததும், சித்தி அடைந்ததும் ஜனவரி மாதம், ஹஸ்த நட்க்ஷத்திரத்தில்.

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் அமைந்துள்ள ஸ்ரீரமண மஹரிஷியின் ஆஸ்ரமத்திற்கு அருகிலேயே ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆஸ்ரமும் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்தில் ஸ்வாமிகள் வாழ்ந்த வீட்டைக் கண்டுபிடித்து அந்த வீட்டில் ஸ்வாமிகள் உட்கார்ந்திருப்பதுபோல் ஒரு சித்திரம் வரைய ஏற்பாடு செய்தார்கள். அப்போது ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் எப்படி யோகாசனத்தில் குக்குடாசனத்தில் உட்காருவார் என்பதை மஹாபெரியவா உட்கார்ந்து காட்டி **"இப்படித்தான் அவர் உட்கார்ந்திருப்பார், இதை பார்த்துக்கோ, இதை வச்சு அவருடைய படத்தை வரை"** என்றாராம்.

சத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளுக்கு சென்னை மாடம்பாக்கத்தில் அற்புதமான பிருந்தாவனம் அமைக்கப்பட்டுள்ளது. அவர் அவதரித்த புண்ணிய பூமியான வழூரில் அவருக்கு ஒரு பெரிய மணிமண்டபம் எழுப்பப்பட்டு வருகிறது. அதற்கான கர்பகிரஹ வாசைக்கால் கடந்த 01.01.2021 வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்டது.



இந்த வருடம் இவருடைய ஜெயந்தி 02.02.2021 செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் அவரை பக்தியுடன் நினைவு கூர்வோமாக.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்.**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 22



## அத்தியாயம் – 2
## ஸாங்கிய யோகம்

இந்த இரண்டாவது அத்தியாயத்தில் 1 முதல் 10 ஸ்லோகங்கள் அர்ஜுனனின் சோக நிலையை விவரிக்கின்றன. இதை நாம் சென்ற இதழ்களில் விரிவாக பார்த்து விட்டோம். 11வது ஸ்லோகத்திலிருந்து தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் கீதா உபதேசம், அதாவது ஞானாபதேசம் தொடங்குகிறது.

**ஸ்ரீ பகவானுவாச**

**அசோச்யானன்வோசஸ்த்வம் ப்ரக்ஞாவாதான்ஸ் ச பாஷேஸ /**
**கதாஸூனகதாஸஸூன்ஸ்ச நானுசோசந்தி பண்டிதா:/ (கீதை 2-11)**

**பொருள் :** நீ துக்கப்படத்தகாத மனிதர்களின் பொருட்டு வருந்துகிறாய். மேலும் பண்டிதர்கள் போன்றும் பேசுகிறாய். ஆனால் உயிர் போனவர்களுக்காகவும் உயிர் போகாதவர்களுக்காகவும் பண்டிதர்கள் வருந்துவதில்லை.

பகவான் அர்ஜுனனை முட்டாள் என்று சொல்லாமல் சொல்லுகிறார். பேச்சில் துக்கப்பட்டு நிற்கும் அர்ஜுனனின் துக்கத்தைப் போக்க ஆத்மஞானத்தை ஸ்ரீகிருஷ்ணர் புகட்ட ஆரம்பிக்கிறார்.

“விவேகம் உள்ளவர்கள் ஒருபோதும் துக்கப்பட மாட்டார்கள்” என்கிறார் கிருஷ்ணன் பகவான் நமக்கு கூறும் ஒரு மந்திரம் **“மா சுச” = விசனப்படாதே.** கீதையின் கடைசி 18வது அத்தியாயத்தில் 66 ஆவது ஸ்லோகத்தில் பகவான் **“ஸர்வதர்மான் பரித்யஜ்ய ............. மா சுச”** = “விசனப்படாதே” என்று கூறுவார். ஸ்ரீகிருஷ்ணன் இந்த 11வது ஸ்லோகத்தில் உபதேசம் ஆரம்பிப்பதும் **“அனுசோசந்தி** = விசனிப்பதில்லை. கீதையை

*முடிப்பதும்* **“விசனப்படாதே” துக்கப்படாதே** *எதனால் துக்கம் வருகிறது என்று கிருஷ்ணன் கூறுகிறார்.* **“கதாஸூனஃக்ஷ** = *இறந்தவர்.* **“அகதாஸூன”** = *இருப்பவர்கள்* **“கதா”** *என்றால் போனவர்* **“அகதா”** = *என்றால் இருப்பவர். நாம் தூங்கும்போது நம் மனது மறைந்துவிடுகிறது. நாம் எழுந்ததும் நம் மனது தோன்றுகிறது. அதாவது நம் வாழ்க்கை என்பது மனதில்* Appearance and disappearance. *இது தொடர்ந்து உள்ளே நடந்துக்கொண்டேயிருக்கிறது.*

*மனதை நல்லவற்றுக்கு திருப்பினால் நம் மனதை எதனாலும் தொடமுடியாது. மொத்தத்தில் இந்த உலகமோ, மற்றவர்களோ நம்முடைய ப்ரச்சனைகளுக்குக் காரணம் அல்ல, நம்முடைய மனதுதான் காரணம். நம்முடைய மனதை சரியாக கையாள நமக்குத் தெரிந்துவிட்டால் நமக்கு ஒரு ப்ரச்சனையும் கிடையாது. வாழ்க்கை சுவையாக, இன்பமாக இருக்கும். யார் நம்மை என்ன சொன்னாலும் கவலையில்லை. வெகு காலத்திற்கு முன்பு யாராவது நம்மை ஏதாவது சொல்லியிருந்தால் அதையே நினைத்து நினைத்து இப்போதும் சொல்லிக் கொண்டே இருப்போம். அதை மறந்துவிட வேண்டும்.*

**மன ஏவ மனுஷ்யாணாம் காரணம்**
**பந்த மோட்க்ஷயோ (அமிர்தபிந்து உபநிஷதம்)**

*மனதுதான் அடிமைப்படுவதற்கும் விடுவிப்பதற்கும் காரணம்.*

*ஒரு வீட்டில் ஒருவர் மரணம் அடைந்தால் எல்லோரும் துக்கப்படுவார்கள். அல்லது நன்றாக நடந்துகொண்டிருந்த ஒருவரின் வியாபாரம் நஷ்டம் அடைந்தால் அவர் துக்கப்படுவார். மனதில் ஒரு கலக்கம் அல்லது குழப்பம் வரும்போது அது தன்னையும் மற்றவர்களையும் பாதிக்கிறது.*

*இந்த 11வது ஸ்லேகத்தில் பகவான் அர்ஜுனனிடம் “இறந்தவர்களை பற்றியோ, இருப்பவர்களைப் பற்றியோ அறிவாளிகள் ஒரு போதும் வருத்தப்படமாட்டார்கள்” என்கிறார்.*

*இனி12வது ஸ்லோகத்தை அடுத்த மாதம் பார்ப்போம்.*

*கீதை தொடரும் ....*

# சுபாஷிதம் — 23

"சுபாஷிதம்" என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள் இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. த3ரித்4ரதாதீ4ரதயா விராஜதே குவஸ்த்ரதா சுப்4ரதயா விராஜதே /**
**கத3ன்னதா சோஷ்ணதயா விராஜதே குரூபதா சீலதயா விராஜதே //**

ஏழ்மையிலும் மனம் தளராமல் துணிவுடன் இருந்தால் அந்த ஏழ்மை அவனுக்கு அழகு. ஆடைகள் கிழிந்திருந்தாலும் அவை தூய்மையாக இருந்தால் அதுவே அழகு. சுவையற்ற உணவும், சூடாக இருந்தால் அந்தச் சூடே உணவிற்கு அழகு. அழகில்லாதவன் கூட ஒழுக்கமாக இருந்தால் அதுவே அவனுக்கு அழகு..

**2. தா3நே தபஸி சௌர்யே ச யஸ்ய ந ப்ரதி2தம்மந /**
**வித்3யாயாம் அர்த்த2லாபே4 ச மாதருச்சார ஏவ ஸ //**

ஒருவனது தானம், செய்யும் தவம், பெற்றுள்ள பராக்கிரமம், கற்கும் கல்வி, ஈட்டிய செல்வம் இவற்றை பிறர்க்குப் பயன்படுத்தும் மனம் அவனனுக்கு இல்லை என்றால், அது அவனது தாயின் மலம் போன்றதே. யாருக்கும் அவனால் பயனில்லை.

**3. தா3ரித்ரியாத் ஹ்ரியமேதி ஹ்ரீபரிக3த: ஸத்வாத் பரிப்3ரச்யதே நிஸ்ஸத்வ: பரிபூ3யதே பரிப4வாத் திர்வேத3ம் ஆபத்3யதே / நிர்விண்ண சுசமேதி சோகநிஹதோ பு3த்3த்3யா பர்த்யஜ்யதே நிர்பு3த்3தி4 : க்ஷயமேத்யஹோ நித4நதா ஸர்வாபதா3 மாஸ்பத3ம் //**

வறுமையால் வெட்கத்தை விட்டுவிடுகிறான். வெட்கத்தை விட்டதால் உண்மையிலிருந்து நழுவுகிறான். உண்மையிலிருந்து விலகும்போது அனைவராலும் அவமதிக்கப்படுகிறான். அவமானத்தால் வெறுக்கப்படுகிறான். வெறுப்படைந்தவனாக வருத்தப்படுகிறான். வருத்தத்தால் கீழே தள்ளப்பட்டவனாக அறிவை இழக்கிறான். அறிவின்மையால் செய்வதறியாது தவித்து முடிவில் அழிவடைகிறான். ஐயகோ! எல்லா இன்னல்களுக்கும் வறுமை அல்லவா காரணமாகிறது.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்
**ப்ரம்மஶ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்**, வேளச்சேரி

# சவாரி

எப்பொழுதும் போல ஆட்டோவை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு அன்றைய நாளிதழைப் புரட்ட ஆரம்பித்தான் செந்தில். செல்போன் மணி அழைத்தது.

“இதோ வந்துடேன் சார், ஸ்டாண்டுல தான் இருக்கேன்” என்றான்.

கோகுலம் அப்பார்ட்மெண்ட் வாசலில் ஆட்டோவை நிறுத்தியவுடன், வாட்சுமேன் எட்டிப் பார்த்தார்.

“கொஞ்சம் முன்னாடி தான ரமா மேடமை ட்ராப் பண்ண, அடுத்த சவாரியா, பேசாம நம்ம அப்பார்ட்மெண்ட் வாசல்லையே நீ வண்டியை நிப்பாட்டிக்கலாம்”.

லேசான புன்முறுவலுடன் கிருஷ்ணன் சார் வருவதற்காக காத்துக் கொண்டிருந்தான். கையில் ஒரு பையுடன் சற்று தள்ளாடியபடியே வந்தார் கிருஷ்ணன்.

“நல்லா இருக்கியா செந்தில், கிளம்பலாமா”, என்றார் கிருஷ்ணன்.

“நல்லா இருக்கேன் சார். கொரானா லாக்டவுன்ல சவாரியே இல்லை, இப்பதான் கொஞ்ச கொஞ்சமா பரவால சார்”

“எங்க சார் போனும்”

“கண் செக்கப்புக்கு தான், காந்தி தெருவில ஒரு க்ளினிக் இருக்குல அங்க போ பா”

“கூட யாரும் வரலயா சார்”

“இல்லப்பா, பசங்க எல்லாம் வெளியூருல இருக்காங்க, நம்ம அப்படியே இங்க பாத்துக்க
வேண்டியது தான்”.

“ஊட்ல அம்மா நல்லாயிருக்காங்களா”

ஆட்டோ ஸ்டார்ட் செய்த உடனேயே ஒரு பைக் சல் என்று அவர்களை கடந்து சென்றது.

“ஏ பாத்து போடா ஊட்ல சொல்டு வந்துட்டியா”

“இந்த swiggy பசங்க ரோட்ல ஈ, காகா இல்லேன்னு கன்னா, பின்னானு ஓட்டுவானுங்க. இவனுங்க தொல்ல தாங்க முடியல.”

*"நீ மெதுவாவே பாத்து போ பா".*

*"ஆஸ்பிட்டலான்டயே வெயிட் பண்ணனுமா சார்",*

*ஏனா எனக்கு 11 மணிக்கு ரமா மேடமை க்ளாஸுக்கு கூட்டிட்டு போனும் வெயிட் பண்ணுவாங்க."*

*"யாருப்பா B block-ல இருக்காங்களே, அவங்க குழந்தை கூட...."*

*"ஆமா சார், அவங்க தான்"*

*"அந்த குழந்தைக்கு 7, 8 வயசு இருக்கும் போல, அன்னிக்கு ஒரு நாள் லிப்ட்ல பேச்சு குடுத்து பார்த்தேன், அதுக்கு சரியா பேச வரலை, பாவம்."*

*"ஆமா சார், பேச்சும் வரலை, ஒரு இடத்தலையும் இருக்காது சார், தினமும் நிறைய கவனம் எடுத்து பார்த்துகிறாங்க. பேச்சு வரதுக்கு ஒரு க்ளாசுக்கு மேடம் கூட்டிட்டு போவாங்க, அப்புறம் ரமேஷ் சார் இந்த மாறி பசங்க விளையாடருதுக்குனு தனி இடம் இருக்கு அங்க கூட்டினு போவாங்க. இப்ப கொஞ்சம் ஒன்னு இரண்டு வார்த்தை பேசுது சார். நான் தான் சார் வாடிக்கையா போவேன். அவங்க புள்ள ஒரு வார்த்தை சொன்னதுக்கே அப்படி சந்தோஷப்பட்டாங்க, இந்த பிரச்சனைக்கு என்னமோ பேர் சொல்றாங்க சார்".*

*"அடடா, அதுதான் இந்தக் குழந்தை பார்க்ல் விளையாட வரதில்லையா, கடவுள் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு மாதிரி விதிக்கிறான் பாரு, நான் என் பசங்களை வளர்க்கறதுக்கு என்ன பண்ணேனு யோசிச்சு பாக்கறேன், ஸ்கூலுக்கு பணம் கொடுத்ததோட சரி, தானே வளர்ந்து வந்துட்டாங்க."*

*"கரெக்ட் தான் சார், இப்படிப்பட்ட பிள்ளைகளை கொடுக்கும்போதே அவங்கள பார்த்துகிறஅளவுக்கு பக்குவம் இருக்கிறஅம்மா அப்பாட்ட தான் கடவுள் கொடுப்பார் போல. 1, 2 நாள் வேலையா சார் இது, காலம் பூரா எந்த எதிர்பார்ப்பும் இல்லாம பாத்துகணும் சார்.*

*லேசா திருப்பினா ஓடறஆட்டோ இல்ல சார், சைக்கிள் ரிக்ஷா மாதிரி முழுக்க இழுத்து கூட்டிட்டு போனும். இந்த புள்ளைக்காக இவங்க செய்றவேல கொஞ்ச நஞ்சம் இல்ல சார்.*

*க்ருஷ்ணன் சாரின் மனதிற்குள் "சே, நம்ம பசங்ககிட்ட இருந்து எத்தனை விதம் எதிர்பாக்கறோம் நம்ம வயசுக்கே*

*அவங்ககிட்ட அநாவசியமா கோபம் வருது. சுத்தி உள்ளவர்களை பார்த்தாவது மாத்திகணும்''என நினைத்துக் கொண்டார்.*

*அக்குழந்தையின் பெற்றோர்களிடம் அளவு கடந்த பரிவும் மரியாதையும் தோன்றியது. அதே சமயம் செந்திலைப் போன்றதொரு எளிய மனிதனின் உலக ஞானத்தையும், ஒவ்வொருவரின் வாழ்க்கையை பற்றி உள்ள புரிதலையும் கண்டு வியந்து போனார்.*

*"சார் வந்துட்டோம், செக் அப் முடிச்சிட்டு போன் பண்ணுங்க சார்''.*

*"சரிப்பா''*

*ஆட்டோவை விர்ரென்று செலுத்தி கோகுலம் அப்பார்ட்மெண்ட்ஸ் வாசலில் நிறுத்தினான். கேட் அருகில் ரமேஷ் சாரும், ரமா மேடமும், குழந்தையுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்களின் முகத்தில் இன்று என்றையும் விட வைராக்கியம் கூடுதலாக தென்பட்டதாக உணர்ந்தான் செந்தில். ஏதுமறியாத சிறு குழந்தை ஆட்டோ மாமாவைக் கண்டவுடன் கைதட்டி குதித்துச் சிரித்தது.*

**வெ.சிவசங்கரி**

## வாசகர் கடிதம்

*வேதபாரதி மாத இதழ் ஆசிரியருக்கு நமஸ்காரங்கள். ஜுன் மாதம் 2020 லிருந்துதான், தங்கள் மாத இதழ் எனக்கு அறிமுகமாகியது. அதில் வருகின்ற ஒவ்வொரு கட்டுரைகளும் மிகப் பெரிய பொக்கிஷங்கள். பாதுகாக்கப்பட வேண்டியவை. குறிப்பாக, திருச்சி ஸ்ரீமான் கணேசன் அவர்களின் தொடர், "பாரததேசப் புனித யாத்திரை'', மிக அருமையாக உள்ளது. வேதபாரதியின் பணி சிறக்கவும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**அன்புடன் ராமகிருஷ்ணன் சந்தானம், ஹோஸதுர்கா, கர்நாடகா.**

*ஸ்ரீமத் பாகவதம் - போன்ற உத்தமமான விஷயங்களை எளிய முறையில் படிக்க உதவியதற்கு நன்றி.*

**கோபாலகிருஷ்ணன், அம்பத்தூர்**

*புத்தம் மிக அருமை - எல்லா பண்டிகைகளுக்கும் பூஜை செய்வதற்கு உண்டான சங்கல்பம் தெரிவித்தால் மிக நன்று.*

**நன்றியுடன் ரமேஷ் கோபி.**

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## விருந்தோம்பல் – அன்றும் இன்றும்



அடுத்தவனுக்கு கொடுக்காமல் ஒருவன் சாப்பிடக்கூடாது என்றும், அதே சமயம் அடுத்தவன் வீட்டில் சமைத்த உணவை ஒருவன் உட்கொள்ளக் கூடாது என்றும் சாஸ்திரங்கள் நமக்கு விதித்திருக்கின்றன. முன்பெல்லாம் ஒரு கிரஹஸ்தன், “இன்றைக்கு எந்த மஹானுக்கு நான் சாப்பாடு அளிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போகிறது?'' என்று நினைத்தான். இதற்கு மாறாக விருந்தாளியோ, “அடுத்தவன் வீட்டில் நான் சாப்பிடக்கூடாது. ஆனால், நீண்ட தூரம் பிரயாணம் செய்ததால், நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். ஏதாவது ஒரு மஹாபிரபு சிறிது உணவை எனக்கு அளித்தால், அதை உண்டு, நான் மாலைக்குள் வீடு போய்ச் சேர்ந்து விடுவேன்'' என்று எண்ணினான். அடுத்தவர்கள் அளிக்கும் விருந்தோம்பலை மிகவும் அவசியமான தருணங்களில் மட்டுமே மக்கள் எதிர்பார்த்தார்கள்; அப்பொழுது கூட மிகவும் தயக்கத்துடன்தான் அவ்விருந்தோம்பலை ஏற்றுக் கொண்டார்கள். விருந்தினர்களை உபசரிப்பது ஒரு பெரும் பாக்கியமென்றும், அது தங்களுடைய தலையாய கடமையென்றும் கிரஹஸ்தர்கள் யாவரும் கருதினார்கள். இப்பேற்பட்ட மனோபாவமே மக்களிடம் அந்தக் காலங்களில் விளங்கியது.

ஆனால், இப்பொழுது நிலைமை எவ்வாறு இருக்கிறது? கிரஹஸ்தர்கள் தங்கள் வீட்டு வாசற்கதவை நன்றாக மூடிக் கொண்டு, மற்றவர்களுக்கு உணவளிக்க மறுக்கிறார்கள். விருந்தினர்களோ, தங்கள் பங்குக்கு, கதவை முட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்து சாப்பிடத் தயாராயிருக்கிறார்கள். மக்களின் மனநிலைகளில் என்ன ஒரு சீர்கேடு.


முற்றும்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பாகவதம்

பரிதி

பகுதி - 2



*நாரதர் வியாஸரிடம் "உங்களுக்கு ஏன் துக்கம் ஏற்பட்டது?" என்று கேட்டார்.*

*நாரதர் இப்படி கேட்டதும் வியாசரின் மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்டது. நமக்கு ஏற்பட்டுள்ள மன பாரத்தை போக்க நாரதர் வழி காட்டுவார் என்று முடிவு செய்து நாரதரிடம் மனம் திறந்து பேசலானார். "தேவரிஷியே எனது மன நிம்மதியின்மைக்கு காரணம் என்ன என்பதை தாங்களே விளக்க வேண்டும்" என்று கேட்டார்.*

*இதைக் கேட்ட நாரதர் "தவசீலரே தர்மத்தை போதிக்கும் மகத்தான ஞான நூல்களான மஹாபாரதம், பகவத்கீதை முதலியவற்றைத் தாங்கள் இயற்றியது மிகவும் புண்ணிய செயல்தான். ஆனால் வெறும் ஞானத்தால் மட்டும் பகவான் மகிழ்வது கிடையாது. நீங்கள் இயற்றிய காவியங்களும், புராணங்களும் மக்களிடையே கடவுள் பக்தியை ஏற்படுத்துவதற்கு பதிலாக அவர்களை பந்த பாசங்களில் பற்று கொண்டவர்களாக மாற்றிவிட்டன. ஆகவே மனிதர்களிடையே கடவுள் பக்தி ஏற்படும்படியும் பகவானின் லீலைகளையும், மகிமைகளையும் போற்றி ஒரு காவியத்தை இயற்றுங்கள். இதைச் செய்தால் உங்களின் மனக்குறை நீங்கி ஆத்ம திருப்தி ஏற்படும். அப்படி தாங்கள் எழுதும்போது அதில் தவறு இருந்தாலும் பரவாயில்லை, அதை பகவான் மன்னிப்பார். பகவான் பார்ப்பது எழுத்துக்களில் பிழைகளை அல்ல. அதன் பின்னால் உள்ள சாரத்தைத்தான் அதற்காக தெரிந்து தவறாக பாடக்கூடாது.*

**யஸ்மின் ப்ரதிஸ்லோகம் அபத்தவதி அபி** = *ஒவ்வொரு ஸ்லோகத்திலும் எந்த வாக்பிரயோகமானது அபசப்தங்களோடு*

*(பா ஸ்கந்தம் 1, அத் 5 ஸ்லோகம் 11)*

*என்று கூறிய நாரதர் "பகவான் அருளால் அனைத்தும் நலமாகும்" என்று வாழ்த்தி விடைபெற்றார்.*

*இதைக் கேட்ட வேதவியாசர் உடனே தியானத்தில்*

ஆழ்ந்தார். ஸ்ரீமான் நாராயணப் பரம்பொருளின் அவதார லீலைகள் அவர் மனக்கண்ணில் விரிய **ஸ்ரீமத் பாகவதம் பிறந்தது.**

ஸ்ரீபகவானின் நாமாக்களையும், ஸ்லோகங்களையும், பாடல்களையும் உண்மையான ஆழ்ந்த பக்தியுடன் பாடும்போது தெரியாமல் தப்பு தப்பாக பாடினாலும் பகவான் ஏற்றுக்கொள்வார் என்பதற்கு கீழ்க்கண்ட சம்பவம் ஓர் உதாரணம்.

ஒரு பக்தர் ஸ்ரீரங்கம் கோவிலில் ரங்கநாதர் முன் அமர்ந்துகொண்டு பகவத் கீதையை தப்பு தப்பாக வாசிப்பாராம். ஆனால் கண்களில் கண்ணீர் விட்டுக்கொண்டே இருப்பாராம். கோவிலில் இருக்கும் பண்டிதர்கள் அவரை அங்கிருந்து விரட்டிவிடுவார்கள். ஆனாலும் அவர் கோவிலில் ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு மீண்டும் வாசிப்பாராம். ஒருநாள் **"சைதன்ய மஹா பிரபு"** அந்த கோவிலுக்கு வந்தார். அந்த நேரம் அந்த பக்தன் கோவிலின் ஒரு மூலையில் ஒரு தூணிற்கு பின்னால் அமர்ந்து கீதையை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது கோவில் பிரகாரத்தைச் சுற்றிவந்த **"சைதன்ய மஹா பிரபு"** அந்த பக்தன் இருக்கும் இடத்திற்கே போனார். அப்போது அங்கிருந்த பக்தர்கள் **"சைதன்ய மஹா பிரபு"** வை தடுத்து "அங்கு போகாதீர்கள் அங்கு ஒருவன் பகவத் கீதையை அபத்தமாக வாசித்துக் கொண்டிருக்கிறான். அதைக் காதால் கேட்கமுடியாது" என்றார்கள். **"சைதன்ய மஹா பிரபு"** அதை காதில் வாங்காமல் அந்த பக்தன் இருக்கும் இடத்திற்கே போனார். அவர் வந்ததை பார்க்காமல் அந்த பக்தன் கண்களில் கண்ணீர் விட்டுக்கொண்டே படித்துக்கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து தன் பக்கத்தில் யாரோ ஒரு ஸ்வாமி நிற்கிறார் என்று உணர்ந்து எழுந்து அவரை நமஸ்கரித்தான். "நான் தப்பு தப்பாக வாசிக்கிறேன், இப்படி வாசித்தால் நான் நரகத்திற்குத்தான் போவேன் என்கிறார்கள். அவர்கள் அப்படி கூறினாலும் என்னால் வாசிக்காமல் இருக்க முடியவில்லை. என் முன் பகவான் கிருஷ்ணர் நிற்பது போல் எனக்குத் தோன்றுகிறது" என்றான். அதைக் கேட்ட **"சைதன்ய மஹா பிரபு"** அப்பா உனக்கு கீதையின் சாரம் கிடைத்துவிட்டது. உனக்கு பகவானின் ஆசி கிடைத்துவிட்டது கவலைப்படாதே" என்று ஆசி கூறினார். பகவானின் நாமாக்களை உச்சரிக்கும்போது பக்திதான் முக்கியம்.

தொடரும்....

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

**2.15. மற்ற உலகங்கள் :** *சென்ற மாத தொடர்ச்சி....*

*சில ஞானிகள் மறு பிறப்பு எய்தியதாகவும் நாம் சில சமயங்களில் சாஸ்திரங்களில் காண்கிறோம். உதாரணமாக, ஒரு மிகப்பெரிய ஆசார்யர், அபாந்தரதமஸ் என்ற பெயரில் இருந்தார். அவர் ஒரு முதிர்ந்த ஞானி மட்டுமல்ல, ஆழ்ந்த கல்விமான் மற்றும் யோகியும் ஆவார். அவர் மோட்சம் அடைந்திருந்தால், அவருடைய கல்வி ஞானம் ப்ரஹ்மனுள்ளேயே கரைந்து போயிருக்கும். அதன் பலன் மக்களுக்கு கிடைக்காமல் போயிருக்கும். எனவே, அவரை மீண்டும் ஒரு உடலுடன் பந்தப்படுவார் என்ற பொருளல்ல. அவர் மீதமிருந்த ப்ராரப்தத்தைக் கிரஹித்துக் கொண்டு, அதன் அடிப்படையில், இன்னொரு உடலை எடுத்துக் கொண்டார். த்வாபரயுகம், கலியுகம் ஆகியவற்றின் இடைப்பட்ட காலத்தில் அவர் கிருஷ்ண த்வைபாயனர் ஆகப் பிறந்தார். இதைப் போல, இன்னும் சிலரும் உள்ளனர். இத்தகையோரை, 'ஆதிகாரிக புருஷர்கள்'' என்று சாஸ்திரங்கள் பேசும்.*

*அத்தியாயம் 2 முற்றும்.*

**ஸ்வாமிகள் அருளிய தர்மத்தின் குரல் புத்தகம் அவசியம் படித்து பயன் பெற வேண்டும். அற்புதமான கருத்துக்கள். புத்தகம் பெற அணுகவும் : 94434 95950**

*24.01.2021 ஞாயிற்றுகிழமை மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை வேதபாரதி இளந்தலைமுறையினரின் பெண்மையைப் போற்றுவோம் நிகழ்ச்சி* Zoom App *வழியாக சிறப்பாக நடைபெற்றது. 100 பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் கலந்து கொண்டனர்.*

## புதுவை வேதபாரதியின் "மார்கழி மஹோத்ஸவம்"

*புதுச்சேரியில் வேதபாரதி துவங்கப்பட்ட ஆண்டு முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளாக மார்கழி மாத நாம சங்கீர்த்தன பஜனை சிறப்பாக நடைபெற்று வருகிறது.*

*வருடத்திற்கு வருடம் மெருகேறிவரும் இவ்விழா, மூன்றாவது ஆண்டாக இந்த சார்வரி வருட (மார்கழி) தனுர்மாத நாம சங்கீர்த்தன பஜனை மஹோத்ஸவம் கடந்த 16.12.2020 அதாவது மார்கழி முதல் நாள் புதுச்சேரி காந்தி வீதி, ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இருந்து துவங்கியது. மாடவீதியை வலம் வந்தபோது தொடர்ந்து ஒரு மணி கொட்டித் தீர்த்த பெரும் மழையையும் பொருட்படுத்தாமல் ஆண்களும், பெண்களும், வயதானவர்களும், குழந்தைகளும் இறை நாமத்தை மழையில் நனைந்தவாறே பாடி வந்தது வர்ணிக்க முடியாத ஆனந்த நிகழ்வு.*

*ஆரம்பமே குதூகலமாக இருந்தால், அடுத்தடுத்து சொல்லத்தான் வேண்டுமா என்ன...! தொடர்ந்து தனுர் மாத ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு பகுதியாக நகர வீதி பஜனை சிறப்பாக நடைபெற்றது. அந்தந்தப் பகுதி பொறுப்பாளர்கள் மிக சிரத்தையுடன் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.*

*இந்த மஹோத்ஸவத்தில், வில்லியனூர், திருவாண்டார்கோவில், காலாப்பட்டு, சூரமங்கலம், கனக செட்டிக்குளம், பாகூர், குரும்பாம்பட்டு என கிராமப் பகுதிகளுக்கும் நமது வேதபாரதி தனது நாம சங்கீர்த்தன இறை பிரார்த்தனையை வழங்கியது. எந்த வகையிலும் நகரத்தைவிட கிராமம் குறைந்ததல்ல என்று பறை சாற்றும் விதமாக அந்தப் பகுதி பொறுப்பாளர்களின் செயல்பாடுகள் இருந்தன. வாகனத்திலிருந்து இறங்கியதும் மேளதாளத்துடன் 'பூர்ண கும்ப' மரியாதை, நிறைவில் விதவிதமான பிரசாதங்கள் என பூர்ணத்துவம் பெற்றிருந்தது. கிராமப் பகுதிகளில் பெண் குழந்தைக்கு ஆண்டாள் வேடமிட்டு பஜனை முடியும் வரை வலம் வந்தது கூடுதல் சிறப்பு.*

*விசேஷமாக கடந்த 03.01.2021 ஞாயிறன்று நமது பஜனைக் குழு காரைக்காலை நோக்கி பயணித்தது, வழியில் திருக்கடையூர் திருக்கோவில் தரிசனம் செய்த குழுவினருக்கு*

காரைக்காலில் சிறப்பான வரவேற்பை அளித்தார் அதன் பொறுப்பாளர் திரு. கோபு அண்ணா அவர்கள்.

தங்குவதற்கு இடம், உணவு என சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார் என்பதைவிட, ''சனிப்பெயர்ச்சி'' முடிந்து ஒருவாரமே ஆன நிலையில் முதல் சனிக்கிழமையான 02.01.2021 அன்று வேதபாரதி பஜனை குழுவினருக்கு "திருநள்ளாறு அருள்மிகு தர்பாரண்யேஸ்வரர்" திருக்கோவில் செயல் அலுவலர் தலைமையில் கொடுக்கப்பட்ட மரியாதையும் விசேஷமான பகவான் தரிசனத்திற்கான ஏற்பாடும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. மேலும், ''வேதபாரதியின்'' மீதான மரியாதையையும், ''வேதபாரதியின்'' சேவைக்கான அங்கீகாரத்தையும் படம்பிடித்து காட்டியது.

இந்தாண்டு நாம சங்கீர்த்தன பஜனையின் சிறப்புகள் :

- தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் பஜனையில் கலந்து கொண்டனர்.
- அதிகாலையில் பனியினை பொருட்படுத்தாது குழந்தைகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.
- கிராமப் பகுதிகளின் பாகவதர்களும் இணைந்து கொண்டனர்.
- பிராமண சமுதாயமல்லாத அனைத்து சமுதாயத்தினரும் உரிய அளவில் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டதோடு ஒவ்வொரு ஆண்டும் இதை தொடர்ந்து நடத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.
- புதிய (பாடகர்கள்) பாகவதர்கள் இணைந்துள்ளனர்.
- சிறுவர்கள் குறிப்பாக பெண் குழந்தைகள் பெருமளவில் பாடல்கள் பாடினர். இது எதிர்காலத்தில் வேதபாரதி பஜனைக் குழுவைப் பற்றிய கவலையை விலக்கியுள்ளது.
- புதியதாக இந்தாண்டு கலந்துகொண்ட சிறுவர்களுக்கு "சம்பிரதாய பஜனை" பயிற்சி அளிக்க வேதபாரதியின் பாகவதர்கள் தயாராகி உள்ளனர்.
- மார்கழி மாத பஜனை நாம சங்கீர்த்தன நிறைவு விழா டாக்டர் உடையாளூர் கல்யாணராம பாகவதரின் நாம சங்கீர்த்தனமாக நடைபெற்றது. தனி செய்தியாக வந்துள்ளது அவசியம் படிக்கவும்.

-ஆதிரையன்

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**




# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "**இலவச காப்பகம்**"

அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் காலங்களில், ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் நம்ம தர்மசாலாவில் அடைக்கலம் தேடி வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகள் உணவு மற்றும் உறைவிடத்தை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்வதோடு, முதலில் தங்களது எதிர்காலத்தைப் பற்றிய பயம் நீங்கி தன்னம்பிக்கை கொள்கிறார்கள். அவ்வகையில் சிறிய வயதில் இரத்த புற்றுநோய் கண்ட தன் மகன் வாசீம்கானுடன் அவரது தாயார் ரஜியா பேகம் 2009ம் ஆண்டு ஸ்ரீ மாதா டிரஸ்டில் தஞ்சம் புகுந்தார்.

அன்று ஸ்ரீ மாதா டிரஸ்ட் அளித்த நம்பிக்கையாலும், உதவிகளாலும் அச்சிறுவன் முற்றிலும் குணமாகி, இன்று ஓர் திடகாத்ரமான இளைஞனாக தன் தாயுடன் வந்து நமது நிர்வாக அறங்காவலரிடம் நல்லாசி பெற்றார்.



நமது நிர்வாக அறங்காவலருடன் வாசீம்கானும் அவரது தாயாரும்

இத்தகைய அற்புதங்கள் நம்ம தர்மசாலாவில் அன்றாடம் நிகழ அச்சாணியாய் இருப்பவர்கள் மனிதநேயம் மிக்க நன்கொடையாளர்கள் மட்டுமே என்றால் அது மிகையல்ல.

21 வருடங்களாக ஏழை புற்றுநோயாளிகளை பாதுகாத்து வரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட், தனது சேவையில் மற்றுமொரு பரிணாமமாக முற்றிலும் இலவசமாக செயல்படும் வகையில் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு முதியோர் இல்லம்** ஒன்றினை தரை தளம் மற்றும் 2 தளங்களுடன் சுமார் 30,000 சதுர அடி



பரப்பளவில் முதியவர்களுக்கான சகல வசதிகளுடன் சுமார் ரூபாய் **ஆறு கோடி** செலவில் சென்னை – திருச்சி நெடுஞ்சாலையில் செங்கல்பட்டுக்கு அடுத்த மாமண்டூர் கிராமத்தில் அமைய உள்ளது.

**தங்களது சொத்துகளுக்கு வாரிசு இல்லையே** என்று ஏங்குவோர் இந்த இல்லத்திற்கு உதவி செய்து தங்கள் வேதனையை நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும், ஊசிமுனையளவும் உங்கள்மீது அன்பு காட்டி உதவி செய்யாத உறவினர்களுக்கும், வளர்ப்புகளுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் உங்கள் சொத்து மொத்தமாக சென்று சேர்வதைக் காட்டிலும் **இந்த நற்செயல் உயர்ந்த புண்ணியம் அல்லவா? சிந்திப்பீர்... இன்றே செயலாற்றுவீர்...**

இம்முதியோர் இல்லத்திற்கான நிதியாக **ரூ.5,00,000/-** வழங்கு வோர் விரும்பும் பெயரில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். மேலும், தங்கள் விருப்பத்திற்கேற்ப நன்கொடை வழங்குவோரின் பெயர்கள் அம்முதியோர் இல்லத்தில் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம் ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா" வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம் ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம் ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / M.O.

Account Name : SRI MATHA TRUST
Bank Name : INDIAN OVERSEAS BANK, Gandhi Nagar, Chennai-20
Current A/c No.:163502000001090 IFSC Code:IOBA0001635

Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. 9500001065 / 9003247857
vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
www.woppershop.com
WOPPER
Fluid Chemistry

# பெற்றோர்களே! கவனியுங்கள்!
## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌளி   பாகம் - 3  பகுதி - 2

*ஜாலியாக துள்ளிக் குதித்து ஓடி, பட்டாம்பூச்சிகளாகப் பறந்து கொண்டிருந்த மாணவ மணிகளை 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு பரீட்சை எனும் "பூதம்" தாக்கும் பொழுது, முதலில் "பயம்" எனும் விஷயம் தாக்குகிறது.*

*பயத்துடன் பரீட்சைகளை அணுகுவது என்பது முழுமையான பெற்றோர்கள் செய்யும் பணி தான். பரீட்சை மார்க், கல்லூரி சேர்வது என்று பெற்றோர்களின் பட்டியல் நீள்கிறது.*

*கடுமையான உழைப்பின் மகத்துவம், "பணியை செய்து முடித்துவிடு" பலனைப் பற்றி கவலைப்படாதே" என்று நம் மதத்தின் அடிப்படை,* 'Focus' *எனப்படும் ஓர் விஷயத்தில் முழு கவனத்தை அளிப்பது எனும் விஷயங்களை அல்லவா பெற்றோர்கள் கற்றுத்தர வேண்டும்?*

*பொருள்கருவி காலம் வினையிடனொடைந்தும் இருள்தீர எண்ணிச் செயல்" (அதிகாரம்– 68, குறள்– 675)*

*"செய்யும் ஒவ்வொரு செயலிலும், அதன் நோக்கம், அச்செயலுக்குரிய சாதனங்கள், செய்ய வேண்டிய காலம், செய்வதற்கான நுணுக்கம், செயலுக்குரிய இடம் ஆகிய ஐந்தையும் சந்தேகத்திற்கு இடமின்றி ஆராய்ந்து அறிந்து கொண்ட பிறகுதான் செய்ய வேண்டும்'' என்கிறார் திருவள்ளுவர்.*

*இதைவிடத் தெளிவாக பெற்றோர்களுக்கு எடுத்து கூறவேண்டுமா?*

*"நீ வாங்கும் மதிப்பெண்கள் பொறுத்து திட்டம் (1), திட்டம் (2), திட்டம் (3) என்று ஏற்பாடு செய்ய வேண்டும். ஒருவேளை 1வது குரூப் கிடைக்கவில்லை என்றால் அடுத்து என்ன' என்று உங்கள் குழந்தைகளிடம் கேட்டு பதில் வாங்க*

வேண்டும். நீங்கள் உங்கள் கனவுகளை திணிக்காதீர்கள்.

இன்றைய கொரோனா பிரச்சினையினால், மாணவர்கள் மாணவர்களாகயில்லை. அவர்களுடைய மகிழ்ச்சி, குதூகலம், உற்சாகம் என்று எல்லாமே போய்விட்டது.

ஒரே ஒரு பரீட்சை நடக்காமல் முன்னேற்றம் தடைபட்டு விட்டதாக கவலை, சராசரி மதிப்பெண் எனும் பொழுது கஷ்டப்பட்டு படித்து பிரயோஜனமில்லையே எனும் துக்கம், வீட்டில் ஏற்படும் டென்ஷன் மறக்கத்தானே பள்ளி சூழ்நிலை அது இல்லாமல் போனதால் தோன்றிய மன அழுத்தம், கிண்டலும், கேலியுமாக பள்ளிகளில் வகுப்புகளையும் அதைத்தாண்டிய சிறிய கர்வத்தோடு கூடிய கல்லூரி வகுப்புகளையும் இனி நம் வாழ்வில் காண்போமா எனும் ஏக்கம், கணினி அல்லது மொபைல் முன்பு எத்தனை மணி நேரங்கள் உட்கார்ந்து கொண்டு, அதையே பார்த்துக் கொண்டு டீச்சர் / விரிவுரையாளர் பேசுவதைக் கேட்பது போன்ற பல்வேறு மனக்குழப்பங்கள் இன்று மாணவ / மாணவியரைத் தாக்கியுள்ளது.

15 வயது முதல் வெளியுலகை எட்டிப்பார்த்து, தனக்கான கல்வி, வேலைப் போன்ற கனவுகளை கண்டு, தோல்வி என்பது வெற்றிக்கான முதல்படி என்பதை புரிந்து ... ம் ... கொரோனா இன்று இதை முற்றிலும் புரட்டிப் போட்டுவிட்டது.

இறைவன் எதையும் காரண காரியமின்றி இவ்வுலகில் செய்வதில்லை என்பது தானே உண்மை.

ஆம், கொரோனா அதன் தாக்கம் என்று அனைத்தும் அவனுடைய திருவிளையாடல் தான்.

வாருங்கள் மேலும் பேசுவோம்.

தொடரும்....


**<u>ஜாதக பரிவர்த்தனைக்கு</u>**

புதுவையில் பதிவு செய்ய விரும்புவோர் அணுகவும் :

**ஸ்ரீ நடராஜன்**

**9443103404**

# ரத ஸப்தமீ



வருடா வருடம் தைமாத அமாவாசையை அடுத்து வரும் ஸப்தமியை **"ரத ஸப்தமீ"** என்பார்கள். **"ரதம்"** என்றால் தேர் **"ஸப்த"** என்றால் ஏழு, அன்றைய தினம் சூரியபகவான் தெற்கு திசை நோக்கி சென்று கொண்டிருந்த ஏழு குதிரைகள் பூட்டிய தன்னுடைய ரதத்தை வடக்கு திசை நோக்கி செலுத்த ஆரம்பிப்பதால் அந்த நாளுக்கு **"ரத ஸப்தமீ"** என்று பெயர்.

அன்றைய தினம் (19.02.2021 – வெள்ளிக்கிழமை) ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் காலையில் ஸ்னானம் செய்யும் போது ஏழு எருக்கன் இலைகளில் அக்ஷதை, அருகம் புல், பசுஞ்சாணி, மஞ்சள் பொடி ஆகியவற்றைஒன்றாகச் சேர்த்து தலையில் வைத்துக் கொண்டு கிழக்கு திசை நோக்கி நின்றுகொண்டு கீழ்க்கண்ட மத்திரத்தைச் சொல்லிக் கொண்டே தலையில் தண்ணீரை விட்டுக்கொண்டே குளிக்க வேண்டும்.

**ஸப்த ஸப்தப்ரியே தேவி ஸப்தலோகைக பூஜிதே**
**ஸப்த ஜன்மார்ஜிதம் பாபம் ஹர ஸப்தமி ஸத்வரம்**
**யத் யத் க்ருதம் பாபம் மயா ஸப்தஜு ஜந்மஸு**
**தன்மே ரோகம் ச சோகம் ச மாகரீ ஹந்த ஸப்தமி**

**நௌமி ஸப்தமி தேவி த்வாம் ஸப்தலோகைக மாதரம்**
**சப்தா(அ)ர்க்க பத்ர ஸ்னானேன மம பாபம் வ்யபோஹய/**

அப்படி குளித்தால் நாம் முன் ஏழுபிறவியில் செய்த பாவங்கள் அகலும் என்று புராணங்கள் கூறுகின்றன.

தொகுப்பு : **டி.துரை**

**வாசகர்கள் கவனத்திற்கு** : வேதபாரதி செய்திகள் படித்துவிட்டு நிறைய நண்பர்கள் தொலைபேசி மூலமாக கருத்துக்களை என்னிடம் தெரிவிக்கிறார்கள் தயவு செய்து வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்தால் மட்டுமே புத்தகத்தில் வாசகர் கடிதத்தில் பதிவு செய்ய முடியும். 9443495950

# "பாரத தேசப் புனித யாத்ரை"

திருச்சி **K.கணேசன்**

*'அத்யாயம் - 9'*

*கயா ஸ்ராத்தம் முடிந்தவுடன் அக்ஷய வட நிழலில் ஏதாவது ஒரு இலை, ஒரு காய் & ஒரு பழம் இந்த மூன்றையும் கணவன் & மனைவி இருவரும் இனி இந்த ஜன்மாவில் சாப்பிடுவது இல்லை என்று விரதம் மேற்கொண்டு சாஸ்திரிகள் மூலம் சங்கல்பம் செய்து சங்கல்பத்தின் முடிவில் கயாவாளி அந்தணர் ஒருவர் நாம் உத்தரிணியால் அளிக்கும் தீர்த்தத்தை தனது கையில் ஏந்திக் கொண்டு நமது விரதத்தை ஆமோதிக்கும் முறையில் அதற்கு ஒரு பிரதி வசனம் சொல்கிறார். அதன் பிறகு இனி நாம் வாழ்நாளில் இந்த மூன்றையும் (இலை, காய் & பழம்) நாம் சாப்பிடவோ அல்லது நம் காலத்திற்குப் பிறகு நம் தலைமுறையினர் நமக்குச் செய்யும் வருட ஸ்ராத்தத்தில் சேர்க்கவும் கூடாது. மேலும் இங்கு விட்ட இலை, காய், கனியை ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் நாம் இருக்கும் ஊரில் தானம் செய்யச் சொல்கிறது சாஸ்த்ரம்.*

*ஸ்ரீராமரும், சீதையும் இந்த ஆலமரத்தின் நிழலில் தான் தசரதருக்கு ஸ்ராத்தமும், விசேஷ பிண்ட ப்ரதானமும் செய்ததாக இராமாயணம் கூறுகின்றது. அதே இடத்தில் நாங்களும் எங்கள் பித்ருக்களுக்கு பிண்டதானம் செய்தது மனதிற்கு நிறைவினைத்தந்தது.*

*கயா ப்ராம்மணர்கள் நாம் தரும் தட்க்ஷிணையை ஏற்றுக் கொண்டு "திருப்தி, திருப்தி, திருப்தி" என்று மூன்று முறைகூறி ஆசீர்வதிப்பார்கள். இது கயாவில் மிகவும் முக்யம். அங்குள்ள ஏழைகளுக்கு அங்கேயே கிடைக்கும் பூரி & மசால் பொட்டலங்கள் வாங்கி சிறிது பணமும் கொடுத்து மனநிறைவு பெற்றோம்.*

*கயாவில் ஸ்ராத்தம் சாப்பிடும் ப்ராம்மணர்கள் கேசரி, பால் பாயசம், பூரி, வடை, ரசம் (இதை சாதம் போட்டு சாப்பிடுவதில்லை) வெறுமனே டம்ளரில் வாங்கி குடிக்கிறார்கள். காய்கறிகள் குறைவாகவே சாப்பிடுகிறார்கள்.*

*நம் ஊரில் ஸ்ராத்தத்தின் போது நாம் கடைபிடிக்கும் அளவிற்கு கயாவில் மடி / ஆசாரம் முழுமையாகப் பார்க்க இயலவில்லை. ஓரளவிற்குப் பார்த்தால் போதும். இதே போல்*

தான் நேரமும் இங்கு ஸ்ராத்தம் செய்து முடிக்க கிட்டத்தட்ட மாலை 4.30 / 5.00 மணி ஆகி விடுகிறது. அதைப் பற்றியும் கவலைப்படாமல் நாம் நல்ல ஸ்ரத்தையோடு நம் பித்ருக்களுக்கு கர்மா செய்வதை ஈடுபாடுடன் செய்தால் இந்தக் குறைகள் பெரிதாகத் தெரியாது. நமக்கும் மனநிறைவும், பித்ருக்களின் ஆசியும் முழுமையாகக் கிடைக்கும்.

அட்ஷயவடத்தில் கார்யங்கள் நன்கு நிறைவடைந்தவுடன் நாங்கள் அங்கிருந்து கீழே இறங்கி தங்கியுள்ள இடத்திற்கு வந்தோம். அப்போது தான் நினைவு வருகிறது அட நாம் இன்னும் காலையில் இருந்து எதுவும் சாப்பிடவில்லை என்று, மணியைப் பார்த்தால் மாலை ஏறத்தாழ 5.00 மணி. பிறகு நாங்கள் சாப்பிட்டுவிட்டு காசிக்குத் திரும்பினோம். வரும் வழியில் புத்த கயா வந்து நன்கு தரிசித்துவிட்டு காசிக்கு வந்து சேர்ந்தோம். கயாவில் நாம் செய்யும் ஸ்ராத்தத்தினால், நமக்கு முன்னால் பத்து தலைமுறையினர், நமக்குப்பின்னால் உள்ள 10 தலைமுறையினர் மற்றும் நம் தலைமுறை ஆக மொத்தம் 21 தலைமுறையினர் கரையேறுகின்றனர். கயாவில் இருந்து காசிவரும் வரை Lorry & Truck Heavy traffic காரணமாக இரவு 11.30 மணிக்கு தான் அனுமன்காட் வரமுடிந்தது.

புத்தகயாவில் ஓர் இடத்தில் புத்தபகவான் ஞானம் பெற்ற போதி மரத்தைப் பார்த்தோம். இங்கு புத்தர்சிலை மரம், கல், பளிங்கு போன்ற பலவித பொருட்களால் கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டு இருந்ததை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

அவதாரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் புத்தபகவான் ராஜக்ருகத்திலிருந்து கயா வந்து புத்தகயா என்ற இடத்திற்கு அருகில் உருபேலாவில் 6 ஆண்டுகள் தவம் இயற்றி ஞானோதயம் பெற்றார். இந்த இடம் கயாவிலிருந்து 12 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இது நிரஞ்ஜனா நதிக்கரையில் அமைதியும், புனிதமும் வடிவெடுத்த இடமாக புத்த கயா அல்லது போத்கயா என்று போற்றப்படுகிறது. புத்தர் தவம் செய்த போதி மரத்தடி அவர் அறிவொளி பெற்ற நன்னாள் வைகாசி மாதப் பௌர்ணமி, இதனை ஸ்ராத்தம் செய்வதற்கு கயா வரும் பக்தர்கள் பலரும் புத்தர் ஞானம் பெற்றபோதி மரத்தை, பிரம்மா, விஷ்ணு & சிவனின் உறைவிடமாகக் கருதி வணங்குகின்றனர்.

தொடரும்....

## மறக்க முடியாத மனிதர் புதுவை"பாலு அண்ணா"



கடந்த அரை நூற்றாண்டு கால அரசியல் நிகழ்வுகளின் தாக்கத்தால் ஒரு பிராமணர் பொது வாழ்வில் முன்னெடுக்க முடியாமல் சமுதாயம் ஒரு பெரும் மாற்றம் கண்டுள்ளது.

இந்நிலையில் "பாலு அண்ணா" புதுச்சேரி அரசு நிர்வாகத்தின் உயர்மட்டத்தில், அரசியல் தலைவர்களிடத்தில் என அனைத்து தரப்பினரிடத்திலும் நேரிடையாகப் பேசி காரியம் ஆற்றுவதில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தார்.

இதற்கு, புதுச்சேரி வர்த்தகர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், ஓட்டல் மற்றும் ரெஸ்டாரண்ட் அசோசியேஷன் கௌரவத் தலைவர், பல அமைப்புகளின் நிறுவனர் என பல பலமிக்க பதவிகள் மற்றும் காரணமில்லை.

மிகப் பெரிய உயரத்திற்கு தான் சென்றுவிட்ட பிறகும் அனைத்து தரப்பினரையும் சமநோக்கில் மனதில் வைத்து பழகுதல், வியாபாரி, அரசு என இருதரப்பிலும் மையமாக செயல்படுதல், நிதானம் தவறாமல் இக்கட்டான சூழலில் தெளிவாக முடிவெடுத்தல், சுய நலமின்றி, விருப்பு வெறுப்பின்றி அனைவரின் நலனிலும் அக்கறையோடு தனது செயல்பாடுகளை வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் கொடுக்கின்ற தகுந்த மரியாதை, கண்ணியமான நடத்தை பாகுபாடு இல்லாமல் அனைவரிடமும் ஆலோசனை கேட்டு செயல்படுதல் போன்ற அவரது தனித்துவமிக்க சிந்தனையும், செயல்பாடுமே காரணமாகும்.

இதுவே, அவரை அப்பெரும் பதவியில் தொடர்ந்து அனைவராலும் எந்த எதிர்ப்புமின்றி அமர்த்தியது. புதுச்சேரி வேதபாரதிக்கும், அதன் நிர்வாகக் குழுவிற்கும் இவர் ஒரு சரியான திசைமாணி. அவரது சிந்தனையின் காரணமாக அவதரித்த "மேட்ரிமோனி" மூலமாக பல இல்லங்களில் திருமண வைபவம் நடந்தேறியுள்ளது. 'பாலு அண்ணாவின்'' ஒவ்வொரு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் மிக முக்கியமானவை.

இவரது இழப்பு புதுவை வேதபாரதிக்கு மட்டுமல்ல வேதபாரதியின் ஒட்டுமொத்த குடும்பத்தாருக்கும் ஒரு நஷ்டமே!

அவரது இழப்பை ஏற்றுக்கொள்ள அவரது குடும்பத்தாருக்கு மன உறுதி தர இறைவனிடம் வேண்டிக் கொள்கிறது வேதபாரதி. ஆனாலும்... எங்களால் மறக்க முடியவில்லை. யாராலும் மறக்க முடியாத மாமனிதர் "பாலு அண்ணா".

**- ஆதிரையன்**

# சாதனைப் பறவைகள்

*(சாதாரணப் பெண்களின் அசாதாரண வெற்றிக் கதைகள்)*

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



## பண்டைய பாரதத்தின் பெண் பண்டிதர்கள்

*பாரத தேசத்துப் பெண்களின் மகத்துவம் குறித்து, பல்வேறு ஆராய்ச்சி கட்டுரைகளும், புத்தகங்களும் உள்ளன. இது பற்றி, சமீபத்தில் வெளிவந்த என் கட்டுரை ஒன்றின் (விஜயபாரதம், தீபாவளி மலர், 2020) சில பகுதிகளை இங்கு இடம் பெறச் செய்கிறேன். இது இன்றைய பெண்களின் புரிதலுக்காக.*

*பண்டைய காலத்திலிருந்தே பெண்கள் ஞானஸ்தர்களாவும் வீர, தீரமானவர்களாகவும், அரசர்களுக்கே ஆலோசனைகள் வழங்கத்தக்க அறிவாற்றல் கொண்ட ஆலோசகர்களாகவும், போர் தளபதிகளாகவும் இருந்து வந்துள்ளனர். அதே சமயத்தில், பெண்களுக்கே உரிய சம்சார தர்மங்களையும் உறுதியுடன் கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பதற்கு எத்தனையோ ரிஷி பத்தினிகள், பெண் ரிஷிகள் மற்றும் அரச குடும்பத்தை சார்ந்தவர்களை உதாரணமாகச் சொல்ல முடியும் ரோமச, லோபாமுத்ரா, அபல, கத்ரு, விஸ்வர, கோஷ, வகம்பினி, யமி, இந்திராணி, சாவித்திரி, தேவஜமி போன்ற ரிக் வேத கால பெண் ரிஷிகள் பதினேழு ரிக் வேத சாகைகளையும், அக்ஷரதபா, சிகதனிவாரி, கௌபாயினி, போன்ற சாம வேத கால பெண் ரிஷிகள் நான்கு சாம வேத சாகைகளை இயற்றியுள்ளதாக அறிய முடிகிறது. பெண்களின் கல்வியை எடுத்துக் கொண்டால், இந்த தேசத்தில் யாரும், எப்போதும் பெண் கல்விக்குத் தடையாக இருந்ததில்லை. எந்த நிலையிலும், எப்போது வேண்டுமானாலும் பெண்கள் ப்ரும்ம ஞானத்தை பெறுவதற்கு ஊக்கமளித்துவந்துள்ளது. நமது சனாதன தர்மம். பிரும்மச்சாரியாக இருந்தபோது, “கார்கி”யும், க்ருஹஸ்தியாக இருந்தபோது “சுடலா”வும் வனவாசத்திலிருந்த*

போது, “மைத்ரியும்” ப்ரும்ம ஞானத்தை பெற்றுள்ளதை நமது இதிகாச புராணங்களிலிருந்து அறியமுடிகிறது. அவ்வாறே “கலபயோகினி” சந்நியாசியாக இருந்தபோதும், “ப்ரும்ம வதனி” திருமணத்திற்கு முன்பும், “சதயோது” திருமணத்திற்குப் பிறகும், ஞானம் பெற்று சிறந்து விளங்கினார்கள். இந்த தேசம் ஒரு போதும் பெண்களின் கல்வி, போர் பயிற்சிகள், அரசியல், இலக்கியம் என்று எந்தத் துறையில் முன்னேறுவதற்கும் தடையாக இருந்ததில்லை என்பதை பல புராண, இதிகாசங்களிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் **ஒரு பெண் வீரம், வீவேகம், அறிவாற்றல், இலக்கியத் திறன் ஆகியவைகளைக் கொண்டிருந்தால்தான் அவள் சார்ந்த குடும்பமும், சமூகமும் உன்னத நிலையை அடைய முடியும் என்று அன்றேநம் முன்னோர்கள் அறிந்திருந்தனர்.**

குருவைக் காட்டிலும், ரிஷி முனிவர்களைக் காட்டிலும் குரு பத்தினிகளுக்கும் ரிஷி பத்தினிகளுக்கும் மிக உயர்ந்த மரியாதை தரப்பட்டு வந்துள்ளதையும் அறிய முடிகிறது. இராமாயண, மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ள சீதை, மண்டோதரி, திரௌபதி, சுபத்திரா உள்பட பல பெண்கள் அறிவாற்றலிலும், சமயோஜித புத்தியிலும், போர்ப்பயிற்சிகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.

சங்ககாலத்திலும் சளைத்தவர்களா பெண்கள்? தமிழின் ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள் உள்பட பல பெண் கதாப்பாத்திரங்கள் சிறப்புடனே சித்தரிக்கப் பட்டுள்ளனர். கல்வி அறிவாற்றலில் மேம்பட்டவர்களாக ஔவையார், காக்கைபாடினி, நக்கண்ணையார் சிறந்த இலக்கிய படைப்பாளராக அரசவையில் சிறந்த அந்தஸ்து பெற்றிருந்தனர். இவ்வாறு அன்றைய பெண்களில் பலரும் அரசனுக்கும், அரசவைக்கும் ஆலோசனை கூறுபவர்களாகவும், தூதுவர்களாகவும், தேரோட்டிகளாகவும், படைத் தளபதிகளாகவும் இருந்துள்ளனர்.

பக்தி இலக்கியங்களைப் படைத்த பெண்களைப் பற்றி

*சொல்லாமல் இருக்க முடியுமா என்ன? ஔவையார், திலகவதியார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள், மீராபாய், ஜனாபாய், முக்திபாய் போன்ற பல பெண்கள் மக்களைத் தங்கள் பக்தி இலக்கியப் படைப்பினால் கட்டிப் போட்டிருந்தனர் என்பதை, இன்றளவும் அன்னார்களது தெய்வகீதங்களும், கதைகளும் இந்த பாரத முழுவதிலும் ஒலித்துக்கொண்டே இருப்பதிலிருந்து அறிய முடிகிறது.*

*பாரத தேசத்துப் பெண்களுக்கு இன்றளவும் உலகமெங்கும் தனி மரியாதை இருக்கிறது என்பதை நான் உள்பட, உணர்ந்த பெண்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்.*

"Oh! You are from India! " *என்று நம்மைப் பார்த்து வியக்காதவர்களே கிடையாது. ஆனால் அந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வது நம் கைகளில்தான் (நடை, உடை, பாவனை) இருக்கிறது எனபதையும் இன்றைய இந்தியப் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

தொடரும்...

## பாவை விழா - 2021

*பள்ளிச் சிறார் சிறுமியர்கள் தங்கள் பள்ளிகளின் வாயிலாக திருப்பாவை, திருவெம்பாவை ஒப்பிவித்தல் போட்டி நடத்திட வேதபாரதியின் வேண்டுகோளின் படி 350 குழந்தைகள் பதிவு செய்து உள்ளார்கள். தற்போது* Zoom App *வழியாக குழந்தைகள் தங்கள் திறமையை வெளிக்கொணர்ந்து சிறப்பித்தார்கள். தொடர்ந்து போட்டிகள் நடந்து வருகிறது.*

*வேதபாரதி பாவை விழா பொறுப்பாளர்கள் ஸ்ரீ ராமசுப்ரமணியம் பள்ளி சிறார்களை ஒருங்கிணைத்து அனைத்து பதிவு வேலைகள் சிறப்பாக செய்துள்ளார்கள். ஒருங்கிணைப்பாளர்களாக ஸ்ரீமதி உஷா, மதுரை ஸ்ரீ முரளி சார் மிகச்சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். நடுவர்களாக ஸ்ரீமதி கோமதி, ஸ்ரீமதி பானுராமசாமி குழந்தைகளை பரீட்சை செய்து உற்சாகப்படுத்தி சிறப்பாக வழிகாட்டினார்கள். நடுவர்களை அறிமுகம் செய்து வைத்து ஸ்ரீ நாராயணன் தொடர்ந்து திருப்பாவை, திருவெம்பாவை நிகழ்ச்சியினை வெற்றியடைய செய்தார்கள்.*

## பசு - சர்வரோக நிவாரணி

## 'நாட்டு இனம் அழிவு - காரணம்' - ஆதிரையன்

கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நமது பாரத தேசம் அந்நியர்களின் வசம் சிக்குண்டு சிதைந்து போனது. எஞ்சியவற்றிலே இன்று நாம் வாழ்கிறோம்.

இஸ்லாமியர்கள் எப்போதும் நேரிடையாக தங்களது வெறித்தனத்தை வெளிப்படுத்துவர். அவ்வாறு அவர்களது ஆட்சிக் காலத்தில் பாரத தேசமக்கள் பெரும் இன்னல்களை சந்தித்து பொருட்களையும் இழந்து அநாதைகளாயினர். பெருமளவில் நமது பொருட்கள் இஸ்லாமியர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த ஆங்கிலேயர்கள் என்று தங்களைப் பறை சாற்றிக் கொண்ட கிறிஸ்துவர்கள்தான் மிகவும் ஆபத்தானவர்கள். இவர்கள், தங்களுக்குப் பிறகும் ஒரு தேசம் தலைநிமிர்ந்து விடக்கூடாது என்பதிலும், அந்த தேசத்தில் தங்கள் வியாபாரம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதிலும் தெளிவான சிந்தனை உள்ளவர்கள். மற்றும், அச்சிந்தனையை நடைமுறைப் படுத்துவதில் கைதேர்ந்தவர்கள்.

இங்கிலாந்து கிறிஸ்துவர்களின் இந்த நோக்கம் தான் அவர்களிடம் விடுதலை பெற்ற பல நாடுகளில் அந்நாட்டின் தனித்துவமிக்க கலாச்சாரம், பாரம்பரியம் இன்றைக்கு இருக்கவில்லை.

ஒரு குழந்தைக்கு பெற்றோர் எப்படியோ அது போன்றதே ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் கலாச்சாரம், பெற்றோர்களை இழந்த குழந்தை வளரும்போது தனது குடும்பத்தின், தாய் தந்தையரின் பெருமைகளையோ அவர்கள் செய்த சமுதாய அறப் பணிகளையோ அறிய முடியாமல் போகிறது. இப்படி வளர்ந்த அந்த குழந்தையும் அறநெறிகளை அறிந்து கொள்ள வாய்ப்பின்றி தான் தோன்றி தனமாக சமுதாயத்தில் வாழ்க்கையில் மனம்போன போக்கில் தனது பயணத்தை தொடர்கிறது. இதனால், தான் சீரழிவதோடு மட்டுமின்ற சமுதாயத்தில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு இதன் தாக்கத்தால் இவனைப் போன்ற பருவத்தினரும் பாதிக்கப்படுகின்றனர்.

மொத்தத்தில் சமுதாயம் பாதிக்கப்படுகிறது. இதனால் தேச வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. கடைசியில் தேசம் கையேந்தும் நிலைக்கு வருகிறது. ஆக, அடிப்படை கலாச்சார சீரழிவே ஒரு

தேச வளர்ச்சிக்கு தடையாகிறது.

இந்த உண்மையை அறிந்த பிரிட்டிஷார் என அழைக்கப்படும் கிறிஸ்துவர்கள், அவர்கள் எந்த நாட்டில் நுழைந்தாலும் அவர்களது முதல் இலக்கு அந்நாட்டின் கலாச்சாரத்தை சீரழிப்பதே! இதற்காக எத்தனை விதமான வழிகளையும், உத்திகளையும் பயன்படுத்துகின்றனர்.


இதன் தொடர்ச்சியே இந்தியாவில் நுழைந்த இவர்கள் இந்தியக் கலாச்சாரத்தை சீரழிக்க தங்கள் பணியை துவங்கினார். ஆனால் இவர்கள் நினைப்பது போல அவ்வளவு சுலபமாக முடியவில்லை. ஆனாலும் ஓரளவு சாதித்தார்கள்.

நமது பாரத தேசத்தின் கலாச்சாரம் என்பது அன்றாட வாழ்வியல் முறை, மொழி, இறைவழிபாடு, இலக்கியம், புராணம், இதிகாஸம், விவசாயம், குறிப்பாக "பசு" வழிபாடு என ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கிறது. இந்த பிணைப்பினை இறைவனே நேரிடையாக உருவாக்கியுள்ளார்.

பாரத பூமி இறைவனே பலப்பல அவதாரம் எடுத்து சராசரி மனிதர்களோடு தங்கள் பாதம் பதித்து வாழ்ந்து சென்ற இடம். இன்றைக்கும், சித்தர்களும், ஞானிகளும் வாழ்ந்து வருகின்ற பூமி. இந்த தேசம் இயற்கையானது. அழிவில்லாதது, இதை அறிந்து கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ ஒரு ஜென்மம் போதாது. இதை அழிக்க நினைப்பவனே அழிவான் என்பதே உண்மை.

இந்த உண்மையை உணராத பிரிட்டிஷ் கிறிஸ்துவர்கள் இவற்றை அழிக்க நினைத்தே முதலில் "பசுமாடுகளை" (நாட்டு இனங்கள்) அழிக்க துவங்குகிறார்கள். தொடரும்...

99940 89133



99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# அக்கசாலை அன்னதானப் பிள்ளையார்

(செஞ்சால்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.ஏட்., பரமக்குடி)

*நம் எண்ணத்திலும், எழுத்திலும், செயலிலும் கலந்து நின்று அருள் செய்பவர் ஸ்ரீவிநாயகப் பெருமான் ஆவார். இவர் எண்ணற்ற பெயர்களுடன் பல தலங்களில் கோயில் கொண்டுள்ளார். அவற்றுள் ஒன்று தான் மானாமதுரை அக்கசாலை அன்னதானப் பிள்ளையார் திருக்கோவிலாகும்.*

*வானரவீரமதுரை என இராமாயணத்தில் போற்றப்படும் தலமே மானாமதுரை ஆகும். இங்கு உத்திரவாகினியா வைகை நதி உள்ளது.*

*வைகையின் கிழக்குக்கரையில் அமைந்துள்ளது கன்னார் தெரு, இப்பகுதியில் சுமார் 660 ஆண்டுகளுக்கு முன்பு விஸ்வகர்மா சமூகத்தினர் தங்கள் தொழில்களைச் செய்துவந்தனர்.*

*அரசின் நாணயம் அச்சடிக்கும் தொழிற்சாலையாகிய அக்கசாலை இங்கு அமைந்திருக்கிறது. மானாமதுரையின் அக்னி மூலையில் அமைந்த இந்த இடத்தில் அன்னதானப் பிள்ளையார் கோயில் கொண்டார்.*

*வேப்பமர அடியில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் இவ்விநாயகரை இலங்கை செல்லுமுன் ஸ்ரீராமர் வழிபட்டு அருள்பெற்றார்.*

*இலங்கையில் சீதாப்பிராட்டியைக் கண்டு திரும்பிய அனுமனும் இவரை வணங்கி அருள் பெற்றார்.*

*1800 ஆம் ஆண்டுகளில் குருகுல முறைப்படி ஸ்ரீவிக்கிரமாதித்திய சுவாமிகள் குழந்தைகளுக்கு இவ்வாலயத்திலேயே கல்வி கற்பித்துள்ளார். இதுவே கன்னார் தெரு துவக்கப்பள்ளியாகி இன்று கல்விப்பணி செய்து வருகிறது. இதன் மூலம் இவ்விநாயகர் கல்வியறிவு செழிக்கத் துணை நிற்பவர் என்பது புரிகிறதல்லவா!. மேலும் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உற்றதுணையாய் இவர் விளங்குகிறார்.*

*மானாமதுரை அருகே உள்ள நெடுவன்தாவு கிராமத்தில் உள்ள விஸ்வகர்மா சமூகத்தினர் இவரையே குல தெய்வமாகக் கொண்டுள்ளனர். மஹாசிவராத்திரி நாளில் அவர்கள்*

மிகப்பெரிய விழா நடத்துகின்றனர்.

ஆலயம் சாலை ஓரத்தில் கிழக்கு நோக்கிய சாளக்காரக் கோபுரத்துடன் நம்மை எதிர்கொள்கிறது.

இடப்புறத்தில் நின்ற கோலத்தில் காவல் தெய்வமாகிய ஸ்ரீ முனீஸ்வரர் காட்சி தருகிறார்.

அஷ்ட லெக்ஷ்மிகள் வீற்றிருக்கும் மகாமண்டபம் கடந்தால் அழகிய கருவறை! கருவறையில் தன் இருபக்கங்களிலும் நாகர்கள் வீற்றிருக்க கிழக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் ஸ்ரீ அக்கசாலை அன்னதான விநாயகர் காட்சி தருகிறார். அவரது பீடத்தை இருபூதகணங்கள் சுமந்து நிற்கின்றனர். இது இவ்வாலயத்திற்கு உரிய சிறப்பு.

ஸ்ரீவிநாயகர் கழுத்தில் உருத்திராட்ச மாலை பூண்டுள்ளார். விநாயகருக்கு அமைந்த 29 ஆயுதங்களில் உருத்திராட்ச மாலையும் ஒன்றாகும்.

மேகாசுரன் என்னும் அசுரனைத் தன் கழுத்திலிருந்த உத்திராட்ச மாலையில் அழித்தார் என்பது விநாயக புராணச்செய்தி. அக்கு என்றால் உருத்திராட்ச மாலை என்பது பொருள். அக்குமாலையணிந்து காட்சி தரும் இவர் அக்கசாலையருகில் கோவில் கொண்டார்.

இராமேஸ்வரம் யாத்திரை போவோருக்கு இங்கு அன்னதானம் செய்யப்பெற்றது. எனவே இவர் ஸ்ரீஅக்கசாலை அன்னதான விநாயகர் என்று போற்றப்படுகிறார்.

மூலவர் முன்னே மூஞ்சூறும் பலிபீடமும் உள்ளன. உற்சவரோ ''செல்லப் பிள்ளையார்'' என்னும் பெயரில் வீற்றிருக்கிறார். பாலசுப்பிரமணியர், ஸ்ரீகாமாட்சி, ஸ்ரீதுர்க்கை, ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி முதலிய பரிவார தேவதைகளையும், ஸ்ரீவிநாயகருக்கு ஏகதள விமானமும், ஸ்ரீபாலசுப்பிரமணியருக்கு சதுர்முக விமானமும், ஸ்ரீகாமாட்சிக்கு ஸ்ரீமகாமேரு விமானமும் அணி செய்கின்றன.

ஆலயத்தின் தலவிருட்சம் வேப்பமரம்! தீர்த்தம் வைகை நதி!

சித்திரை மாதம் வருடப்பிறப்பு, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடியில் ஸ்ரீவீரழகர் வருகை தருதல்,

ஆவணியில் விநாயகசதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி, ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி திருப்பள்ளி எழுச்சி, தைப்பொங்கல், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்விநாயகரை திங்கள் கிழமையில் வழிபட கேதுதோஷம் நீங்கும், செவ்வாய்க்கிழமை வழிபட்டால் திருமணம் கைகூடும். புதன்கிழமைகளில் வழிபடத் தொழில் அபிவிருத்தி உண்டாகும். வியாழக்கிழமைகளில் வழிபட கல்வி பெருகும், வெள்ளிக்கிழமைகளில் வழிபட நவநிதிகளும் பெருகும். சனிக்கிழமைகளில் வழிபட சனியின் கெடுபலன்கள் அகலும், ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபட உயர்பதவிகள் கிட்டும்.

வாழ்க்கையின் மூலாதாரங்களை வழங்கி அருள் செய்யும் ஸ்ரீ அக்கசாலை அன்னதானப் பிள்ளையாரை வணங்கி அருள்பெறுவோமாக!.

தொடரும்...

**Space Sponsored by : Dharmapuri Sath Sangam, Dharmapuri.**



# புரோஹிதர்
# "ஆவணம் - ஒரு ஆதாரம்"

*நீதிமன்றம் சென்ற சகோதரர்களுக்குள்ளான சொத்து வழக்கில் விசாரணை துவங்குகிறது. முதல் மனைவி சார்பில் வைக்கப்பட்ட முதல் வாதத்தை ஏற்கிறார் நீதிபதி. அதாவது என்னுடனான திருமணமே முறையானது என்றும் எனது கணவர் வேறேதும் திருமணம் செய்யவில்லை என்றும் வாதிக்கிறார்.*

*வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி இரண்டாவது மனைவி வழி மகனிடம் இவரே (அதாவது இறந்து போனவரே) எனது தந்தை என்றும் நிருபிக்கத் தேவையான ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிடுகிறார்.*

*இதை எப்படி நிரூபிப்பது என்ற குழப்பத்திலிருந்து இளைய மகன் அவ்வூரிலுள்ள மணி என்கிற வழக்கறிஞரை சந்தித்து ஆலோசனை கேட்கிறார். (இந்த வழக்கறிஞரும் அந்தணரே) இந்த வழக்கறிஞரின் ஆலோசனைப்படி தங்கள் கிராம பரம்பரைப் புரோஹிதரை சந்திக்கிறார்.*

*புரோஹிதர் வழக்கம்போல, சாதாரணமாக இறந்தவரின் கருமகாரியப் பத்திரிக்கையை தனது கோர்வையில் இருந்து எடுத்து தருகிறார். (இதுபோல எத்தனை அனுபவங்களுக்கு சொந்தக்காரரரோ அப்புரோஹிதர்)*

*அந்தப் பத்திரிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதை ஏற்று இப்பத்திரிக்கையை ஏன் ஆதாரமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என நீதிபதி கேட்கிறார். இதற்கும் முதல் மனைவி தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்படுகிறது. காரணம், அச்சமூகத்தில் இப்படி யார் வேண்டுமென்றாலும் பத்திரிக்கை அச்சடிக்க முடியும் என்ற வாதமே!*

*இறுதியாக இளைய மகன் வேறு வழியின்றி மீண்டும் புரோகிதரை நாடுகிறார். நீதிமன்றத்தின் அடுத்த நாள் அமர்வில் புரோகிதரை நேரிடையாக ஆஜராகி தனது அட்டவணையை (குறிப்புப் புத்தகம்) நீதிமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறார்.*

*இந்த அட்டவணையை கண்ட நீதிபதிக்கு ஆச்சர்யம். பல கிராமங்களின் குறிப்புகள் அதுவும் நூற்றுக்கணக்கான ஆண்டிற்கான குறிப்புகள் மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.*

*அட்டவணைப் பற்றி பலவித எண்ணங்களோடு சில விளக்கங்களும் புரோகிதரிடம் கேட்கிறார் நீதிபதி. எல்லாவற்றிற்கும் தனக்கே ஆன நிதான நிலையில் பதிலளிக்கிறார் புரோஹிதர்.*

*இந்த வினாக்களில் நீதிபதி கேட்கும் முக்கியமான வினா, ஏன் இவ்வளவு தெளிவாக இந்த குறிப்புகளை நீங்கள் எழுதி வைத்துள்ளீர்கள் என்று...*

*அதற்கு சர்வசாதாரணமாக பதிலளிக்கிறார் புரோஹிதர். எனக்கு இந்த கிராமங்கள் ஒரு குடும்பம் போன்றவை. கிராம மக்கள் எல்லாம் எனது குடும்ப உறுப்பினர்கள். ஒவ்வொருவரும் நன்றாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் எண்ணம். அவர்கள் அனைவரும் நன்றாக இருக்க வேண்டுமெனில், ஒவ்வொருவரும் தங்கள் மூதாதையர்களுக்கான கர்மாவை (அதாவது திவசம்) தவறாது செய்ய வேண்டும். அப்படியெனில் இந்தக் குறிப்பு மிக அவசியமாகிறது. எங்கள் மூத்தோர்கள் ஏற்படுத்திய இந்த குறிப்பின் அடிப்படையில் எந்தக் குழப்பமும் இன்றி நான் கர்மாக்களை செய்து வருகிறேன், அதே போல எனக்குப் பிறகும் இது தொடரவேண்டும் என எனது பணியை தொடர்கிறேன் அவ்வளவே என்றார்.*

*புருவம் உயர்த்திப் பார்த்த நீதிபதி உயர்ந்த எண்ணமும், சிந்தனையும் கொண்ட புரோகிதரின் குறிப்புகள் எந்தவித தனிப்பட்ட உள்நோக்கமும் இல்லாதவை. இவரது குறிப்புகளின் அடிப்படையில் இறந்தவர்களுக்கு நான்கு மகன்கள் என்பதை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு நான்கு பேருக்கும் சொத்தினை சமமாக வழங்க உத்தரவிடுகிறது என்று தனது தீர்ப்பில் நீதிபதி தெளிவாக நீதி வழங்கி அந்த இளைய மகனுக்கும் தனது வாழ்வாதாரத்திற்கான சொத்தின் பங்குப் பெற வகை செய்கிறார்.*

*தீர்ப்பின் ஒரு வரியில் சமுதாய தர்மம் காத்திட புரோகிதரின் குறிப்புகள் பேருதவியாக இருப்பதாக பாராட்டுகிறார்.*

**- ஆதிரையன்**


---

*டிசம்பர் 2020 மாத புத்தகம் பக்கம் 42-ல் ஔவையார் என்பதற்கு பதிலாக புறநானூறு என்று தவறுதலாக பதிவு செய்து விட்டதற்கு வருந்துகிறோம்.*

*ஆசிரியர்.*

உ
ஸ்ரீராமஜெயம்

# ஆறாம் ஆண்டு மாஸிமக ப்ரம்ஹோத்ஸவ ஷடங்க ஸஹித ருக்வேத ஜடா பாராயண யஜுர் வேத ஸாமவேத அதர்வவேத பாராயண ஆஹ்வான பத்ரிகா



## 17.02.2021 முதல் 26.02.2021 வரை

**இடம் :**

விஜயவல்லி, ஸுதர்ஸனவல்லி ஸமேத
ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமி ஆலயம்,
ஸ்ரீ மங்களாம்பிகா ஸமேத
ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் ஆலயம்,
கும்பகோணம்

**வேதபாராயண நிகழ்வுகளில் பங்குபெற
அன்புடன் அழைக்கும்
வேதபாரதி குடும்பத்தினர்கள்.**

கடந்த 5 வருடங்களாக மிகவும் சிறப்பாக நடந்தது போல இவ்வருடமும் ருக், யஜுர், ஸாம, அதர்வ வேதங்கள் சிறப்பாக நடக்க நாமும் பங்கு பெறுவோம்.

மேலும் தொடர்புக்கு
**ப்ரஹ்மஸ்ரீ கைலாஸநாத கனபாடிகள்**
**99947 52907 / 99949 26537**
**Account Details :**
**Bank : Indian Bank, Branch : Mutt Street, Kumbakonam**
**A/c. No : 441720017, IFSC Code : IDIB000M138**

# இதயப்பூர்வ நன்றி

வேதபாரதி செய்திகள் பத்திரிகையை மேம்படுத்தும் நோக்கில் எழுத்தாளர்களின் எண்ணங்கள், வாசகர்களின் பார்வைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதோடு பத்திரிகை பயணிக்கும் பாதையையும் அறிந்து கொள்வதற்காக கடந்த 13.01.2021 புதன்கிழமை காணொளி மூலமாக பத்திரிக்கையின் எழுத்தாளர் மற்றும் வாசகர் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

இந்த நோக்கத்திற்கு உரமிடும் விதமாக கலந்து கொண்டோரின் பேச்சுகள் அமைந்திருந்தது.

மூத்த பத்திரிக்கையாளரும் நமது பத்திரிக்கையின் பிரதான தூணுமான திரு.டி.சூரிய நாராயணன் அவர்கள் பத்திரிக்கை துவக்கம் முதல் இன்று வரை பயணிக்கும் பாதையில் சந்தித்த சவால்களை தொகுத்தார். இது மற்றவர்களுக்கு பெரும் ஊக்கமளிப்பதாக இருந்தது.

எழுத்தாளர் டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன் அவர்கள் பல பணிச்சுமைகளுக்கிடையே நமது பத்திரிக்கையில் எழுதுவது பாக்கியமாக கருதுவதாக சொன்னார்.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத சூழலில் வாழ்த்துரையும், தொடர்ந்து இங்கே எழுத ஆர்வம் கொள்வதாகவும் செய்தி அனுப்பி இருந்தார் திருமதி. காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்கள்.

திரு. பரமக்குடி சீனிவாசன் அவர்களும், திரு.திருச்சி கணேசன் அவர்களும், புதுவை ஆதிரையன், ஸ்ரீமதி சிவசங்கரி வேதபாரதியில் எழுதுவதை ஒரு வரமாக நினைப்பதாக கூறினார்கள்.

சிறப்புரை ஆற்றிய அமுதசுரபி பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ திருப்பூர் கிருஷ்ணன் அவர்களுக்கும், ஸ்ரீ திருப்பூர் குமாரசாமி அவர்களுக்கும், ஸ்ரீ கிருஷ்ண ஜெகந்நாதன் ஜி அவர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வி மதுரிமா இராமகிருஷ்ணன், ஸ்ரீமதி ஸ்ரீமுகி, மதுரை ஸ்ரீ முரளிதரன் சேதுராமன் மற்றும் செல்வி சுபஸ்ரீ சங்கர் அவர்களும் இவ்விழாவினை சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள்.

நமது பத்திரிக்கை குடும்பத்தினர் யாரேனும் எங்கள் பார்வையில் விடுபட்டிருந்தால் அந்த நன் நெஞ்சங்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதயப்பூர்வ நன்றியுடன்.....

**ஆர்.வெங்கட்ராமன்,** ஆசிரியர், வேதபாரதி செய்திகள்.

# இந்தியா 'பாபா' க்களின் மூழ்கிவிட்டதா?



பாரத தேசம் மட்டும்தான் விஞ்ஞானத்துடன் ஆன்மீகத்திலும், சமயம் சார்ந்த விஷயங்களிலும் தொடர்ந்து சீரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த தேசத்தில் மட்டும்தான் மிகப் பழமை வாய்ந்த கலாச்சாரமும், பண்பாடுகளும் நிறைந்துள்ளன. இங்குள்ள மனிதர்களின் வாழ்க்கை முறை, இந்த தேசத்தின் புனித நூல்களான ஸ்ரீ பகவத் கீதை, ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஜெயின் ஆகமம், பைபிள், குரான், குருக்ரந்த் மற்றும் பலவற்றைஅடிப்படையாகக் கொண்டுள்ளது. இத்தகைய நூல்களின் சாராம்சங்களை, குருமார்கள் விஞ்ஞானத்தின் துணை கொண்டு எளிமைப்படுத்தியுள்ளதால், அவைகளின் மீதான நம்பிக்கை, பொது மக்களிடம் மிகவும் ஆழமானதாக உள்ளது. மக்கள், மதம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த விஷயங்களைப் பின்பற்றஆரம்பித்துவிட்டார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் அதனுள்ளேயே கடவுளைக் காணவும் செய்கிறார்கள். பண்டைய காலங்களில் முனிவர்கள், சாதுக்கள் உலக வாழ்க்கையிலிருந்து விலகி, இயற்கையோடு ஒன்றிப் போய், நீண்ட நெடும் காலம் தவம் செய்து தெய்வீக சக்தியின் இருப்பை அனுபவ பூர்வமாக உணரத் தொடங்கினார்கள். அத்தகைய முனிசிரேஷ்டர்கள் காலத்தைக் கடந்து தெய்வீகத்தை உணரத் தலைப்பட்டார்கள்.

ஆனால் காலப்போக்கில், இத்தகைய துறவிகள், பெருமளவில் மக்களைத் தன் வசப்படுத்தும் திறன் கொண்டவர்களாகி, பெரும் செல்வங்களை ஈட்டும் பேராசை கொண்டவர்களாக மாறிப் போனார்கள், ஏழ்மையுடனும் வாழ்க்கைத் துன்பங்களுடனும் போராடும் சாதாரண மனிதர்களை, அவர்களுடைய பலவீனங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். எத்தை தின்றால் பித்தம் தெளியும்' என்று அலையும் அப்பாவி மக்கள், இது போன்ற'போலித் துறவி'களின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை வைத்து, அவர்களையே கடவுளாகவும், அவர்களால் தங்களுடைய அனைத்துத் துன்பங்களும் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றும் நினைக்கிறார்கள்.

**தமிழாக்கம் : - டாக்டர் ஷ்யாமா ஸ்வாமிநாதன்.** தொடரும்...

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

REGD No. : TN/CC(S)DN/571/21-23 RNI No. : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/21-23 / Valid from 01.01.2021 to 31.12.2023
Published 1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To　　　　Printed Matter

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.